528

# வரலாறு

## தரம் 7

புதிய பாடத்திட்டம் 2016

சிறுகுறிப்பேடு



பூபாலசிங்கம் புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Class No: | 900 |
| Acc No | 528 |

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

LENDING
ARASADY PUBLIC LIBRARY

# வரலாறு

பொது நூல் நிலையம்
மட்டக்களப்பு
புத்தகம் இரவல் கொடுக்கும் பகுதி

...han.com

இணையம் :
WWW.POOBALASINGHAM.COM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


01. அலகு 01 / எமது புராதன வாழ்க்கை முறை 01 - 17

02. அலகு 02 / எமது கீர்த்திமிக்க அரசர்கள் 18 - 46

03. அலகு 03 / எமது கலாசார மரபுரிமைகள் 47 - 62

04. அலகு 04 / பிறகால ஆட்சி மையங்கள் 63 - 74

05. அலகு 05 / ஐரோப்பாவின் புராதன நாகரிகங்கள் 75 - 92


**கணிப்பீட்டுப் பயிற்சிகள்**
**வினாக்களும் விடைகளும்.**


01. அலகு 01 / எமது புராதன வாழ்க்கை முறை 93 - 97

02. அலகு 02 / எமது கீர்த்திமிக்க அரசர்கள் 98 - 102

03. அலகு 03 / எமது கலாசார மரபுரிமைகள் 103 - 107

04. அலகு 04 / பிறகால ஆட்சி மையங்கள் 108 - 112

05. அலகு 05 / ஐரோப்பாவின் புராதன நாகரிகங்கள் 113 - 117

06. வரலாற்று விளக்கப்படங்களும் குறிப்புக்களும். 118 - 127



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 01

# எமது புராதன வாழ்க்கை முறை

01. இலங்கையில் பண்டைய கால மக்களின் ஜீவனோபாயத்திற்காக (வாழ்வாதாரத்திற்கு) ஈடுபட்ட தொழில்கள் / பொருளாதாரத் முறைகள் யாவை?

- விவசாயம் (பயிர்ச்செய்கை, மந்தைவளர்ப்பு)
- கைத்தொழில்
- வர்த்தகம்

02. பண்டைய மக்களின் வாழ்வாதாரத்தின் இயல்புகளை எழுதுக?

- பெரும்பாலானோர் கிராமங்களில் வாழ்ந்தனர்.
- எளிமையான வாழ்க்கை முறை.
- தேவைகள் வரையறுக்கப்பட்டிருந்தன.
- வாழ்வாதாரத்துக்குரிய உணவுத் தேவைகளை உற்பத்தி செய்யும் நோக்காக கொண்டிருந்தனர்.
- பெரும்பாலானோர் விவசாயத்தை தொழிலாகக் கொண்டிருந்தனர்.

03. பண்டைய பயிர்ச்செய்கை முறைகளை குறிப்பிடுக?

- சேனைப்பயிர்ச்செய்கை (மேட்டுநிலப்பயிர்ச்செய்கை)
- நெற்செய்கை (சேற்றுநிலப் பயிர்ச்செய்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேனைப்பயிர்ச் செய்கை

**04. சேனைப்பயிர்ச்செய்கை என்றால் என்ன?**

காடுகளை அளித்து தீயிட்டு கொளுத்தி துப்பரவு செய்து சாம்பலை பசளையாகக் கொண்டு மழைநீரை நம்பி மேற்கொள்ளும் பயிர்ச்செய்கை.

**05. இலங்கையின் வரலாற்று மூலாதாரங்களில் சேனைப் பயிர்ச்செய்கை பற்றி எவ்வாறு குறிப்பிட்டுள்ளது?**

- ♦ உம்மக்க ஜாதகக் கதைகளில் - "சேன்"
- ♦ கல்வெட்டுகளில் - "பிட்டபிம"
- ♦ புத்சரன இலக்கியம் - "செஹென்"

**06. மகாவம்சம் சேனை பற்றி கூறும் தகவல் களைத் தருக?**

கவந்தீச மன்னன் காலத்தில் உருகுணை பிரதேசத்தில் கிரி என்ற குடியிருப்பில் நிவில் செடிய கிராமத்தில் வாழ்ந்த சகோதரர்கள் ஐவரால் சேனை ஒன்றை உருவாக்கி உழுந்து பயிரிட்டனர் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

**07. சேனைப் பயிர்ச்செய்கைக்காக மேற்கொள்ள வேண்டிய படிமுறைகளைத் தருக?**

- ♦ ஏற்ற நிலத்தை தெரிதல் (மேட்டு நிலத்தில்)
- ♦ தெரிவு செய்த நிலத்தில், விலங்குகளையும் உயிரினங்களையும் அகற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- காட்டைத் தீயிட்டு எரித்து சுத்திகரித்தல்
- மரங்களின் அடிப்பகுதிகளை மேலும் தீயிட்டு பொசுக்கிப் பண்படுத்தல்.

**08. புராதன காலத்தில் புதிதாக தீயிட்டு உருவாக்கிய நிலத்தை எவ்வாறு அழைத்தனர்?**

- நவதெளிசேன
- நவதானியங்கள் செழிப்பாக வளரும் நிலம்

**09. சேனையைப் பாதுகாத்துக் கொள்ள மேற்கொண்ட வழிமுறைகளைத் தருக?**

- கம்புகளினால் வேலியமைத்தல் (தண்டு வெட்ட)
- பாதுகாப்புக்காக தீயை மூட்டி வைத்திருத்தல்
- உயர்வான மரங்களில் குடிசைகள் (பரண்) அமைத்து பாதுகாத்தல்

**10. சேனைப்பயிர்ச்செய்கையில் பயிரிடப்பட்ட பயிர்களைக் குறிப்பிடுக?**

- **உலர்தானியப் பயிர்கள்**
  நெல், தினை, பருத்தி, கரும்பு, எள்ளு, பயறு, உளுந்து
- **மரக்கறிப் பயிர்கள்**
  வட்டுக்காய், கத்தரிக்காய், சாம்பல் பூசனி, வாழை, சுரைக்காய், வெள்ளரிக்காய்
- **கிழங்குகள்**
  வற்றாளை, சிறுகிழங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. "சேனைப்பயிர்ச்செய்கை மூலம் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டது" இலக்கிய மூலாதாரங்கள் கூறும் விடயங்களைத் தருக

- சேனையில் பயிரிடப்பட்ட நெல் கரை நெல் எனக் குறிப்பிடப்பட்டது.
- கரை நெல் என்பதன் இன்னொரு சொல் "சாலி" எனப்படும்.
- துட்டகைமுனுவின் மகன் பிறந்த காலத்தில் பேரளவில் நெல் உற்பத்தி செய்யப் பட்டமையால் மகனுக்கு சாலிய குமரன் எனப் பெயர் சூட்டியதாக "சீஹலவத்து" எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

12. சேனைப்பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப்பட்ட விவசாய உபகரணங்களைத் தருக?

- வீச்சரிவாள், மண்வெட்டி, அரிவாள், கத்தி, மட்டப்பலகை

13. சேனைப் பயிர்ச்செய்கையின் போது கையாளப்பட்ட சொற்பதங்களையும் கருத்துககளையும் தருக

- நவதெளி சேன - புதிய சேனை நிலங்கள்
- கினியாதி காவ - காடுகளுக்கு தீயிட முன்னர் விலங்குகளை விரட்ட எழுப்பும் ஒலி
- ஹெலி கடா - வெருளி (பானை ஒன்றை தலையாகக் கொண்டு செய்யப்பட்டது.)
- தண்டு வெட்ட - சேனையைப் பாதுகாக்க கம்புகளால் கட்டப்பட்ட வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெல (பரண்) - உயர் மரங்களில் கட்டப்படும் குடில்
- சாலி - கரை நெல்
- கெதி அட, கெதிகனக - சேனைப்பயிர்ச் செய்கையின் போது அறவிட்ட வாரி

## சேற்றுநிலப் பயிர்ச்செய்கை

14. சேற்றுநிலப்பயிர்ச்செய்கை வேறு எவ்வாறு அழைக்கப்பட்டது?
    - நெற்பயிர்ச்செய்கை
    - நீர்ப்பாசனப் பயிர்ச்செய்கை

15. சேற்று நிலப்பயிர்ச்செய்கைக்கு நீரை எவ்வாறு பெற்றுக்கொண்டனர்?
    - அணைகள் கட்டி குளங்களை அமைத்து
    - சிறிய அளவில் மழைநீரை நம்பி பயிர்ச் செய்கை இடம்பெற்றது.

16. கல்வெட்டுகளில் குளங்களை அமைத்தவர்கள் அல்லது உரிமையாளர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
    வெப்ஹமிக, வபிஹமிக

17. பாரிய குளங்களை அமைக்கவேண்டிய தேவைக்கான காரணங்களைத் தருக?
    - சனத்தொகை அதிகரிப்பினால் பாரிய அளவில் பயிர்ச்செய்கை செய்ய வேண்டியிருந்ததால்.
    - கிராமியக்குளங்களில் நீர் போதாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்முதலில் குளங்களை கட்டிய மன்னன் பண்டுகாபய மன்னன் ஆவான். அபயவாவியே இலங்கையின் முதற் குளம் எனக் கருதப் படுகிறது.

18. பாரிய அணைக்கட்டுக்களைக் கட்டி பெரிய குளங்கள் கட்டிய மன்னர்களையும் குளங்களையும் குறிப்பிடுக?

- மகாசேனன் - மின்னேரியா / மணிஹீரவாவி (16 குளங்கள், 1 கால்வாய்)
- தாதுசேனன் - கலாவாவி / கலாபள்ளுவாவி (18 குளங்கள், 1 கால்வாய்)
- 2ம் முகலன் - பதவியாக்குளம்

19. கீர்த்திஸ்ரீ மேவன் காலத்து தோணிகல கல்வெட்டில் குறிப்பிடப்படும் நெற் போகங்கள் எவை?

- பெரும்போகம் / (மகா போகம்) - அகலஹஸ
- இடைப்போகம் - மெதஹஸ
- சிறுபோகம் / (யால போகம்) - பிடதடஹஸ

20. நெற்பயிர்ச்செய்கைக்கு வயல் ஒன்றை தயார்படுத்தும் முறைகளைத் தருக?

- நிலத்தை உழுதல்.
- உழுதல் மூலம் இயற்கைப் பசளை பெறப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீரைத் தேங்கத் தக்க வகையில் நிலத்தை வடிவமைத்தல்
- கிருமிகள், பறவைகளிடமிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.

**21. நெற்பயிர்ச்செய்கையைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட பாரம்பரிய நடவடிக்கைகளைத் தருக?**

- வயலிலும், வரம்பிலும் இடத்துக்கிடம் தென்னோலை நட்டு வைத்தல்.
- எண்ணெயில் நனைக்கப்பட்ட திரிகளை எரித்தல்.
  (இலுப்பெண்ணெயில் ஊற வைத்து அவற்றை காஞ்சிரைக் குச்சிகளில் சுட்டி எரிக்கப்படுவது).

**22. பின்வரும் பதங்களை விளக்குக?**
சூடடித்தல், நெற்குதிர், களம்

- சூடடித்தல் - வேளாண்மையை எருமை, மாடுகளை கொண்டு மிதித்து நெல்லை வேறாக்கல்
- நெற்குதிர் - அறுவடை செய்யப்பட்ட வேளாண்மையைக் குவியலாக அடுக்கி வைத்திருத்தல் (பாதுகாப்பு, எதிர்காலப், பயன்பாடு)
- களம் - சூடடிக்கப் பயன்படுத்தப்பட்ட இடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. **புராதன காலத்தில் உணவிற்காக நெல்லை எவ்வாறு பதப்படுத்தினர்?**
- பச்சை அரிசி (நெல்லைக்குத்தி பச்சை அரிசி பெறப்பட்டது.)
- புழுங்கல் அரிசி (நெல்லை அவித்து உலர்த்தி குற்றி புழுங்கல் அரிசி பெறப்பட்டது.)

## விலங்கு வளர்ப்பு

24. **விலங்கு வளர்ப்பின் மூலம் மக்கள் பெற்றுக்கொண்ட பயன்கள் எவையாகும்?**
- விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்பட்டது.
- போக்குவரத்திற்கு பயன்படுத்தியமை.
- உணவுகள் பெறப்பட்டது (பால், இறைச்சி, முட்டை, தயிர், வெண்ணெய், மருந்து வகைகள்).
- பொருட்களை ஏற்றிச் செல்லல்.

25. **விலங்கு வளர்ப்பில் ஆடு, மாடு, பன்றி, கோழி என்பன வளர்க்கப்பட்ட போதிலும் மாடு வளர்ப்பு முக்கியத்துவம் பெற்றிருந்தது அதற்கான தகவல்களைத் தருக?**
- 4ம் காசியப்பன் கல்வெட்டில் பாலைப் பெற்றுக்கொள்ள வளர்க்கப்பட்ட பசுக்கள் "கிரி கெரி" என அழைக்கப்பட்டது.
- பசுவில் இருந்து பஞ்சப் பொருட்கள் (பால், தயிர், மோர், வெண்ணெய், நெய்) ஆகிய ஐந்துப்பொருட்களும் பஸ்கோரச என அழைக்கப்பட்டன.
- மாடுகளை வளர்ப்பவர்கள் கோபலகர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும், வளர்க்கப்பட்ட கிராமம் கோபாலகம் எனவும் அழைக்கப்பட்டது.

**26. "தவளம்" முறை என்றால் என்ன?**
மாடுகளின் முதுகில் பொருட்களை ஏற்றிச் செல்லும் முறையாகும்.

## கைத்தொழில்

**27. புராதன காலத்தில் கைக்கொண்ட கைத்தொழில்களையும் அது தொடர்பான கைவினைஞர்களையும் தருக.**

| கைத்தொழில்கள் | கைவினைஞர்கள் |
|---|---|
| ♦ இரும்புத்தொழில் புரிவோர் | - கம்மாளர் (லோகுரு) |
| ♦ தங்கத்தொழில் (ஆபரணம்...) | - துலாதார |
| ♦ செம்புத்தொழில் | - சுவர்ணகார (ரண்கருவன்) |
| ♦ வெள்ளித்தொழில் | - தம்பகர |

**28. இரும்புக் கைத்தொழில் மூலம் செய்யப்பட்ட உபகரணங்கள் எவை?**
மண்வெட்டி, கத்தி, கோடாரி, அரிவாள், ஏர்வாள், வாள், கேடயம், ஈட்டி, அம்பு.

**29. ஏனைய உலோகங்கள் பயன்படுத்திச் செய்யப்பட்ட உற்பத்திகளை தருக?**
- அணிகலன்கள் (மாலை, வளையல், தோடு, நெற்றிப்பொட்டம்)
- கோயில் மணி, கலசம், குத்துவிளக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. மண்ணைப் பயன்படுத்தி (மட்பாண்டக் கைத்தொழில்) உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைத் தருக?

ஓடு, செங்கல், சட்டி, பானை

31. பண்டைய இலங்கையில் மட்பாண்டம், இரத்தினக்கல் தொழில், பஞ்சு ஆகிய தொழில்களில் ஈடுபட்டோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

- மட்பாண்டம் செய்வோர் - கும்பகார (கும்பல்லு, குயவர்)
- இரத்தினக்கல் தொழில் - மணிகர (பட்டை தீட்டுவோர்
- பஞ்சு (நெசவாளர்) - பெஹெரகார

## வர்த்தகம்

32. ''இலங்கையில் புராதன கால வர்த்தகங்கள் உள்நாட்டு வர்த்தகம், வெளிநாட்டு வர்த்தகம் எனும் இருவகையாகக் கொண்டிருந்தது'' வர்த்தகம் தொடர்பான மூலாதாரக் குறிப்பு களைத் தருக?

- புராதன வணிக நகரங்களாக அனுராதபுரம், மகாகம என்பன திகழ்ந்தன.
- 4ம் உதயனது பதுளைத் தூண்கல் வெட்டில் சந்தை நிர்வாகம் தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வணிக நகரங்கள் "நிகம்" எனவும், வணிக அமைப்புக்கள் "புக" எனவும் அழைக்கப்பட்டது.
- பெருமளவில் உள்நாட்டு வர்த்தகம் பண்டமாற்று முறையிலும் குறைந்தளவில் பணப்பரிமாற்றம் மூலமும் இடம்பெற்றது.
- அம்பாறை ரஜகலை தொல்பொருள் ஆய்வில் இருந்து கண்டெடுக்கப்பட்ட நாணயம் "ஹஸ் எபு கஹபண" நாணயம் பணப்பரிமாற்றத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

33. இலங்கையானது வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடுவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் எவை?

- இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளமை.
- இலங்கை, கீழைத்தேய, மேலைத்தேய வர்த்தகப் பாதையில் அமைந்திருந்தமை.
- இயற்கைத் துறைமுகங்கள் காணப்பட்டமை

34. வெளிநாட்டு வர்த்தகத்தில் முக்கியம் பெற்ற துறைமுகங்களைக் குறிப்பிடுக?

- மாதோட்டம் (மன்னார்)
- கோகண்ண (திருகோணமலை)
- கொடவாயா (அம்பாந்தோட்டை)

35. இலங்கையுடன் வர்த்தக தொடர்புகள் கொண்டிருந்த நாடுகளைத் தருக?

இந்தியா, சீனா, உரோமம், பாரசீகம், அரேபியா, தென்கிழக்காசிய நாடுகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. வெளிநாட்டு வர்த்தகத்தில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களையும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களையும் பட்டியலிடுக?

| ஏற்றுமதிப் பொருட்கள் | இறக்குமதிப் பொருட்கள் |
|---|---|
| யானைத்தந்தம் | பீங்கான் |
| முத்து | பட்டுத்துணி |
| இரத்தினக்கற்கள் | நறுமணப் பொருட்கள் |
| மருந்துவகைகள் | குதிரைகள் |
| வாசனை திரவியங்கள் | கம்பளங்கள் |
| பெறுமதியான மரங்கள் | பவளங்கள் |
| யானைகள் | விசிறிகள் |

37. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான மூலாதாரத் தகவல்களைத் தருக?

- புராதன துறைமுகங்களிலிருந்து கண்டெடுக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்.
- இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் சிதைவுகள்.
- வெளிநாட்டு வர்த்தகத்தை நிர்வகிக்க சுங்க அதிகாரிகள் கடமை புரிந்துள்ளமை பற்றிய தகவல்கள்.
- துறைமுகங்களில் சுங்கத் தீர்வைகள் அறிவிடப்பட்டமை (கொடவாய துறைமுகம்).
- அநுராதபுர மன்னன் பாதிகாபயன் ருவான்வெலிசாய தூபியை அலங்கரிக்க உரோமாபுரிக்கு தூதுவர்களை அனுப்பி கண்ணாடி மணிகளைப் பெற்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசாரம்

**38. கலாசாரம் என்றால் என்ன?**

குறிப்பிட்ட ஒரு சமூகத்தில் வாழ்கின்ற மக்கள் குழுவினரின் நடத்தை, நம்பிக்கைகள், சமூகப்பழக்கங்கள், ஆடை, ஆபரணங்கள், உணவுப் பழக்கங்கள், விழுமியங்கள் இரசனை ஆகிய பண்புகள் ஒன்றிணைவதையே கலாசாரம் என்கின்றோம்.

**39. இலங்கையில் கலாசாரம் விருத்தியடைவதற்கான காரணங்களைத் தருக?**

- பௌத்தமதம் கொண்டு வரப்பட்டமை. (தேவநம்பிய தீசன் காலத்தில்)
- இந்துமதம் விருத்தி பெற்றமை.
- மொழிகளில் ஏற்பட்ட விருத்தியும் வளர்ச்சியும்.

**40. இலங்கையில் பௌத்தமதம் பரவியதில் ஏற்பட்ட அனுகூலங்களைக் கூறுக?**

- சமூகத்திற்கு ஒழுக்கங்களும் போதனையும் கிடைக்கப் பெற்றமை.
- பரஸ்பரம் ஒருவருக்கு ஒருவர் உதவி புரிந்து மனப்பாங்குடன் வாழும் வாழ்க்கை இடம்பெற்றது.
- மக்கள் பொதுப்பணிகளின் மூலம் ஐக்கியப் பட்டுச் செயற்பட்டனர். (தாது கோபுரங்களை அமைத்தல், அணைகள், குளங்கள் அமைத்தல்)
- கட்டிடக்கலை, ஓவியக்கலை, சிற்பம், செதுக்கல் போன்ற கலைகள் வளர்ச்சி பெற்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அகிம்சை மார்க்கத்திற்கு மதிப்பளிக்கப் பட்டது.
- மக்களிடையே மன அமைதி, ஒற்றுமை போன்ற மனிதப்பண்புகள் தோன்றின.

**41. அத்தம முறை என்றால் என்ன? அத்தம் முறையால் விருத்தியடைந்த பண்பு களைக் குறிப்பிடுக?**

- உழைப்புக்கு உழைப்பை பரிமாறிக் கொள்ளும் முறையாகும்.
  (உ+ம்) அறுவடையின் போது ஒருவருக் கொருவர் மாறிமாறி உழைப்பை வழங்குவது.
- ஒருவருடன் ஒருவர் நட்புறவாக இருத்தல், உதவிபுரிந்து வாழும் பண்பு.

**42. விவசாயி வேடம் பூண்டு வயல் ஒன்றில் அறுவடைக்கு சென்ற மன்னன் யார்?**

மகாசூலி மகா திஸ்ஸ (அனுராதபுரமன்னன்) அத்தம் முறைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

**43. புராதன காலத் திருமணம் தொடர்பான விபரங்களைத் தருக?**

- மனித வாழ்வில் முக்கியமான குடும்பம் என்ற அமைப்பின் உருவாக்கத்திற்கு பிரதானமான விடயம் திருமணம் ஆகும்.
- ஒவ்வொரு மனிதனது வாழ்வின் விசேடமான சடங்காகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

- தமது குலத்திற்கு பொருத்தமான திருமணத்தை செய்து வைத்தனர்.
- சம்பிரதாய முறைகளைப் பேணி திருமண உறவில் பிரவேசித்தனர்.
- ஆதிகாலத்திருமண முறைகள் எளிமையான கௌரவமான முறையில் மேற்கொள்ளப்பட்டன.

**44. புராதன சமூகத்தில் பெற்றோர் பிள்ளைகளை வளர்த்த முறையினைக் குறிப்பிடுக?**

- ஒழுக்கமாகவும், பண்பாகவும் பிள்ளைகள் வளர்க்கப்பட்டனர். நற்பிரஜைகளாகி பெரியோர்களின் பாராட்டுகளும் பெற்றனர்.
- புதல்விமார்கள் பெற்றோர்கள் பாதுகாப்புடனும் கண்காணிப்புடனும் வளர்க்கப்பட்டனர்.
- வீட்டைச் சுத்தமாக வைத்திருத்தல், உணவு சமைத்தல் போன்றவற்றை புதல்வியருக்கு பயிற்றுவித்தனர்.

**45. "சத்தர்மலங்கார" எனும் நூல் குறிப்பிடுவது யாது?**

துட்டகைமுனுவின் மகன் சாலியகுமாரனின் மனைவி அசோகமாலா சுவையான உணவு சமைத்ததைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

**46. புராதானகால மரணச்சடங்கில் இடம்பெற்ற விடயங்களைத் தருக?**

- வெவ்வேறு மக்கள் பிரிவினருக்கு வெவ்வேறு மயானங்கள் காணப்பட்டன.
- இறுதிக்கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு அஸ்தியைப் புதைத்தனர்.

Class No: 900
Acc No 528

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சடலங்கள் காட்டிலுள்ள கல்லறைகளில் வைத்தனர்.
- சூத்திரப் பிரிவினருக்கு தனியான மயானம் இருந்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது.

47. பண்டுகாபய மன்னன் காலத்தில் மரணச் சடங்கு தொடர்பான நடவடிக்கைகள் தருக?

- பிணங்களை எடுத்துச் செல்வதற்கு 150 புலையர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.
- மயானங்கள் வெவ்வேறாக ஒவ்வொரு பிரிவினருக்கும் பிரிக்கப்பட்டிருந்தது.
- சூத்திரர்களுக்கு தனிமயானம் ஒதுக்கப் பட்டிருந்தது.

48. புராதன காலத்தில் மரணச்சடங்கு தொடர்பான பல பழக்கவழக்கங்களை காணக்கூடியதாகவிருந்தது. அவற்றை எழுதுக

- ஒருவர் மரணமுற்றால், அவரது உறவினர் கள் பணம், பண்டங்கள் அன்பளிப்பாக வழங்குதல்.
- அயலவரது ஆபத்திலோ துன்பத்திலோ தயங்காமல் உதவி புரிதல்.
- மரண ஊர்வலங்கள் வழிபாட்டுத்தளங்கள் முன்னால் செல்வாதாயின் வாத்தியங்கள் முழங்காது அமைதியாகச் செல்லல்.
- பிணத்தை துணி ஒன்றினால் சுற்றி பாடை ஒன்றில் வைத்து தூக்கிச் செல்லல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. புராதான கால மக்களின் பழக்க வழக்கங்கள் பண்பாடுகள் பற்றி குறிப்பிடுக?

- தமது கடமைகள், பொறுப்புக்கள் என்பவற்றில் கவனம் செலுத்தினர்.
- மூத்தோரை மதித்ததுடன் கௌரவித்தனர்
- சம்பிரதாயங்கள், கலைகள் என்பவற்றைப் பேணினர்.

50. 8ம் அக்க போதி மன்னன் தனது தாயாருக்கு செய்த பணிவிடை பற்றி எழுதுக.

- தினமும் தலைக்கு எண்ணெய் தடவி முடியைச் சீவினான்.
- வியர்வையைத் துடைத்து வாசனைத் திரவியங்களைத் தடவினான்.
- நகங்களை கத்தரித்து விரல்களைச் சுத்திகரித்தான்.
- சுத்தமான, சௌகரியமான ஆடைகளை அணிந்தான்.
- தனது கையினாலேயே ஆடைகளை கழுவினான்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*அலகு 02*

# எமது கீர்த்தி மிக்க அரசர்கள்

01. அநுராதபுர முற்பகுதியின் சிறந்த ஆட்சியாளர்களைக் குறிப்பிடுக?
- பண்டுகாபயன்
- தேவநம்பியதீசன்
- துட்டகைமுனு
- வலகம்பாகு
- வசபன்
- மகாசேனன்
- தாதுசேனன்

02. அநுராதபுர இராச்சிய இறுதிக்கால அரசர்களின் பெயர்கள் மூன்றினை எழுதுக?
- மானவர்ம மன்னன்
- முதலாம் சேனன்
- இரண்டாம் சேனன்

03. பொலன்னறுவைக் கால ஆட்சியாளர்களின் பெயர்களைக் குறிப்பிடுக?
- 1ம் விஜயபாகு
- மகாபராக்கிரமபாகு / 1ம் பராக்கிரமபாகு
- நிஸங்க மல்லன்

## மானவர்ம மன்னன் (கி.பி 684 - 718)

04. மானவர்மன் அரசனாகும் முன்னர் காணப்பட்ட அரசியல், பொருளாதாரம் ஆகியவற்றின் சூழ்நிலையை எழுதுக.
- 50 ஆண்டுகள் இலம்பகர்ண மோரிய வம்சங்களிடையே மோதல்கள் ஏற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உள்நாட்டு மோதல்களினால் நிலையான ஆட்சியின்மை.
- போர்களின் காரணமாக நாட்டின் செல்வம் அழிவுற்றமை.
- ஆட்சி அதிகாரத்தை பெறும் பொருட்டு தென்னிந்திய படைகளை வரவழைத்தமை.
- பொருளாதாரம் வீழ்ச்சியுற்றமை.

**5. மானவர்ம மன்னனுக்கு முன்னரான ஆட்சியாளர்கள் பற்றிய விபரம் தருக?**

- கி.பி. 650ம் ஆண்டளவில் இரண்டாம் காசியப்பன் 9 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவன் மானவர்ம மன்னனின் தந்தையாவான். மானவர்மன் சிறுவனாக இருந்த வேளையில் நோயின் காரணமாக மரணமடைந்தான்.
- 2ம் காசியப்பனுக்கு பின் 2ம் தடோபதீசன் மன்னன் ஆனான். இவனது காலத்தில் மோதல்கள் பல இடம்பெற்ற வண்ணமாக விருந்தன.

**6. மானவர்மன் இந்தியாவிற்கு தப்பி ஓடியதற்கான காரணம் யாது?**

2ம் தடோபதீசன் இவனைக் கொலை செய்யத் தேடியமை.

**7. மானவர்மன் ஆட்சியை பெற்றுக் கொண்ட முறையினை எழுதுக**

- பல்லவமன்னன் 1ம் நரசிங்கனிடம் தஞ்சம் புகுந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பல்லவமன்னனுக்கு எதிரானவர்களுடன் போர் தொடுக்க உதவினான்.
- விசுவாசத்துடன் பணியாற்றினான்.
- முதலாம் நரசிங்கவர்மன் உதவியுடன், இலங்கையில் முதலாம் படையெடுப்பை மேற்கொண்டான்.
- 1ம் நரசிங்கன் நோய்வாய்ப்பட்டதன் காரணமாக படையெடுப்பை நிறுத்தி இந்தியாவிற்கு மீண்டான்.
- இரண்டாம் நரசிங்கவர்மன் உதவியுடன் இரண்டாவது படையெடுப்பில் (கி.பி. 684) ஹத்தாட மன்னனை தோற்கடித்து இலங்கை மன்னனானன்.

**8. மானவர்மன் மன்னனாகியதும் எதிர் நோக்கிய சவால்களைத் தருக?**

- 50 ஆண்டுகள் நிலவி வந்த குழப்ப நிலையை சீர் செய்ய வேண்டியிருந்தமை.
- அரசியல், பொருளாதாரம் சீர் குலைந்து காணப்பட்டமை.
- நடுத்தர வயதில் ஆட்சியைப் பெற்றமை.

**9. மானவர்ம மன்னன் ஆட்சி காலத்தின் சிறப்புக்கள் அல்லது மாற்றங்கள் என நீர் கருதுபவை யாவை?**

- 35 ஆண்டுகள் தொடர்ச்சியான நிலையான ஆட்சி வழங்கியமை.
- மரபு ரீதியான நிர்வாக ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டமை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

- அரச உரிமை மீதான மரபு முறை ஆரம்பிக்கப்பட்டது.
- மானவர்ம மன்னனின் பின்னர் அவனது வாரிசுகள் ஆட்சிக்கு வந்தனர்.
- மானவர்ம வம்சத்தினர் 300 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்.

## முதலாம் சேனன் (கி.பி 833 - 853)

**10. முதலாம் சேன மன்னனுக்கு முன்னர் ஆட்சி புரிந்த மன்னர்களைக் குறிப்பிடுக?**

- 2ம் தப்புலன் (முதலாம் சேனனின் தந்தை) (16 ஆண்டுகள்)
- 4ம் அக்கபோதி - (3 ஆண்டுகள்)

**11. முதலாம் சேன மன்னன் காலத்தில் படையெடுப்பை மேற்கொண்டவன் யார்? அப்படையெடுப்பின் விளைவு யாது?**

- ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன் (பாண்டியமன்னன்)
- **விளைவுகள்**
  - யுத்தகாலத்தில் மன்னனின் சகோதரன் மகிந்தனும், இளவரசன் காசியப்பனும் கொல்லப்பட்டு 1ம் சேனனின் படை தோல்வியடைந்தது.
  - 1ம் சேனன் பாதுகாப்புக் கருதி மலையரட்டைக்கு தப்பியோடினான்.
  - பாண்டியப்படை அநுராதபுர நகரைச் சூறையாடியது, நாட்டின் பெறுமதி மிக்க செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

12. **மீண்டும் 1ம் சேனன் எவ்வாறு மன்னனானன்?**
பாண்டிய மன்னனுடன் சமாதான ஒப்பந்தம் மேற்கொண்டதன் மூலம்.

13. **முதலாம் சேனன் மீண்டும் மன்னனான பின்னர் மேற்கொண்ட நடவடிக்கைகளை எழுதுக?**
- ♦ பாண்டிய மன்னனின் ஆக்கிரமிப்பால் சிதைவுண்ட பிரதேசங்களை நன்னிலைக்கு கொண்டு வந்தான்.
- ♦ ரிட்டிகல ஆராமை, ஜேத்தவனராமய, அபயகிரி விகாரைகளுக்கு அருகில் புதிய கட்டடங்களை அமைத்தான்.
- ♦ போரில் இறந்த காசியப்ப இளவரசரின் மூத்த புதல்வனாகிய சேனன் (2ம் சேனன்) இளவரசனை யுவராஜனாக நியமித்தான். இவன் உருகுணைப் பிரதேசத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான்.

## இரண்டாம் சேனன் (கி.பி 853 - 887)

14. **இரண்டாம் சேன மன்னனின் பணிகளைக் குறிப்பிடுக?**
- ♦ மிகிந்தலையில் வைத்தியசாலையை ஸ்தாபித்தான்.
- ♦ மகாவலிகங்கையின் மணி மேகலா எனும் அணைக்கட்டை புனரமைத்தமை (மினிப்பே அணைக்கட்டு)
- ♦ மின்னேரியக் குளத்தில் மதகு ஒன்றைக் கட்டியமை.
- ♦ ஆக்கிரமிப்பாளர்களால் அழிந்து போன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிடங்களை கட்டி எழுப்ப நடவடிக்கை மேற்கொண்டான்.

- நாட்டில், சாந்தியும், சமாதானமும் நிலவும் சூழ்நிலையை ஏற்படுத்தினான்.
- புத்த சாசனத்தை கட்டியெழுப்பினான்.

**15. (அ) 2ம் சேனன் பாண்டிய நாட்டின் மீது படையெடுக்க எண்ணியமைக்கான காரணம் யாது?**

முதலாம் சேனன் காலத்தில் பாண்டிய மன்னனால் ஏற்படுத்தப்பட்ட அபகீர்த்தியைப் போக்குவதற்கேயாகும்.

**(அ) ஆக்கிரமிப்பில் உதவிய பாண்டிய இளவரசன் யார்?**

2ம் வரகுண பாண்டியன்.

**16. இரண்டாம் சேனன் வெற்றி பற்றி எக்கல்வெட்டில் காணப்படுகிறது?**

அநுராதபுரத்தில் உள்ள "கிரிபின்னியாவ" கல்வெட்டு.

## அரசாட்சி அமைப்பு முறை

**17. மத்திய ஆட்சி என்பதை விளக்குக?**

மன்னனும் மன்னனுக்கு உதவும் அதிகாரிகள் குழுவும் நாடுமுழுவதும் தமது அதிகாரத்தைக் கட்டுப்படுத்தும் விதத்தில் உருவாக்கப்பட்ட ஆட்சி முறை மத்திய ஆட்சியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. அநுராதபுர யுகத்தில் நிலவிய அரசுரிமை பாரம்பரியம் எவ்வாறாக அமைந்திருந்தது என உதாரணங்களுடன் குறிப்பிடுக?

பொதுவாக அரசுரிமை மரபு வழியில் அமைந்தது.

1. தந்தைக்கு பின் மகனுக்கு அரசுரிமை கிடைத்தல்

   உ+ம் :- பண்டுகாபயனுக்குப் பின் மூத்த மகனான மூத்த சிவனுக்கு அரசுரிமை கிடைத்தது.

2. மூத்த சகோதரனுக்குப் பின் இளைய சகோதரனுக்கு அரசுரிமை கிடைத்தல்.

   உ+ம் :- துட்டகைமுனுவுக்குப் பின் அவனின் சகோதரன் சத்தாதிஸ்ஸன் ஆட்சி உரிமை பெறல்.

   - தேவநம்பிய தீசனுக்குப் பின் அவனது சகோதரனுக்கு ஆட்சியுரிமை கிடைத்தது.

19. எதிர்கால ஆட்சியுரிமை உள்ள இளவரசர்களுக்கு இளமைப் பருவத்தில் வழங்கப்பட்ட பயிற்சிகளைக் குறிப்பிடுக?

- ♦ உயர்ந்த கல்வியைக் கொடுத்தமை.
- ♦ மொழியறிவு மற்றும் ஆவணங்கள் தொடர்பான கல்வியை வழங்கியமை. (பிக்குகள் மூலம்)
- ♦ சிறந்த நிபுணர்களால் வில்வித்தை, வாள்வித்தை போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20. பட்டாபிஷேகம் என்றால் என்ன?**

- புதிய மன்னர் ஒருவர் அரசுரிமையைப் பெற்ற பின்னர் பட்டாபிஷேகம் செய்வது வழக்கமாக இருந்தது.
- பட்டாபிஷேகம் என்பது மன்னன் தனது பொறுப்புக்களை சட்டரீதியாக பொறுப்பேற்கும் ஓர் நிகழ்வாகும்.

**21. அரசாட்சியில் மன்னனின் கடமைகளை எழுதுக?**

- நாட்டில் சட்டத்தையும், அமைதியையும் பேணல்
- நாட்டின் பாதுகாப்பைப் பேணல்
- மத்திய ஆட்சிக்கும் பிரதேச நிர்வாகத் திற்குமான அதிகாரிகளை நியமித்தல்.
- நீர்ப்பாசன வசதிகளை மேற்கொள்ளல்.
- நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தல், வரிவிதித்தல்.
- நீதிசார் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**22. அரச நடவடிக்கையில் மன்னனுக்கு உதவிய அரச அதிகாரிகளைக் குறிப்பிடுக?**

- யுவராஜன் - (எதிர்கால அரசாளும் உரிமை பெற்றவன்)
- சேனாதிபதி - (போர் நடவடிக்கைகளுக்கு பொறுப்பானவன்)
- பொருளாளர் - (நிதி சார்ந்த நடவடிக்கை களுக்கு பொறுப்பானவன்)
- ஆவணப்படுத்துபவர் (மகலே) - (ஆவணங் களுக்கு பொறுப்பான பிரதிநிதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**23. நாட்டின் பணிப்பாளர் சிலருக்கு வழங்கப்பட்ட பெயர்களைக் குறிப்பிடுக?**

- குதிரைப் பணிப்பாளர் - அஷ அதெக
- யானைப் பணிப்பாளர் - அதி அதெக
- நகர பரிபாலகர் - நகர குத்திக
- வர்த்தக நடவடிக்கை களுக்கான தலைவர் - பன அதெக

**24. "அதெகவரு" என்பதை மிகச் சுருக்கமாக விளக்குக?**

- அநுராதபுரத்தின் அதிகாரிகள் கல் வெட்டுகளில் இப்பெயர் கொண்டு குறிக்கப் பட்டுள்ளனர். இது சமஸ்கிருத மொழியில் பணிப்பாளர் என்ற பதவினைக் குறிப்பதாகும்.

**25. மானவர்ம அரசவம்சம் ஆட்சிக்கு வந்த பின்னர் அரசுரிமை முறை எவ்வாறு காணப்பட்டது?**

ஏப்பா (ஆதிபாத), மாப்பா (மகாதிபாத) போன்ற அரசபதவிகளுக்கு இரு குடும்ப இளவரசர்கள் நியமிக்கப்பட்டு அப்பதவிகளினை வகித்து வரிசைக் கிரமப்படி மன்னனாக வந்ததாக கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## பிரதேச ஆட்சி

**26. அநுராதபுர காலத்தில் பிரதேச ஆட்சி முறைபற்றி எழுதுக?**

- அநுராதபுரத்தை சூழவுள்ள பிரதேசங்கள் வடக்கு (உத்தரதிஸ்ஸ) தெற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தக்கிணதிஸ்ஸ), கிழக்கு (பிராச்சின திஸ்ஸ), மேற்கு (பஸ்சிம பஸ்ஸ) என நிர்வாக அலகுகளாக பிரிக்கப்பட்டிருந்தது.

- இதற்கு மேலதிகமாக "ரட" அல்லது "ரட்த" என அழைக்கப்பட்ட ஆட்சிப்பிரிவு இருந்தது.
- இவற்றின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட அதிகாரிகள் "ரட்லது" அல்லது "ரட்டலத்தன்" என அழைக்கப்பட்டனர்.
- தலைநகரில் இருந்து தொலைவில் அமைந்த பிரதேசங்கள் மலையரட்டை, மாயரட்டை, உருகுணை என அழைக்கப் பட்டன.
- நாட்டின் மிகச் சிறிய நிர்வாக அலகு கிராமம் ஆக இருந்தது.
- இக்கிராமங்களை (அநுராதபுர யுக ஆரம்பத்தில்) நிர்வகித்தவர்கள் "கமிக" எனவும் அநுராதபுர யுகத்தின் பின்னரான காலத்தில் "கம்லத்தன" எனவும் அழைக்கப்பட்டனர்.

**27. நாட்டைப் பாதுகாக்க மன்னனுக்கு உதவியவர்களைத் தருக?**

- சேனாதிபதி
- பிரதேச ஆட்சியாளர்

**28. அநுராதபுரத்தின் முன்னரைப் பகுதியில் மன்னனிடம் இருந்த படையணிகளைக் குறிப்பிடுக?**

- யானைப்படை
- குதிரைப்படை
- இரதப்படை
- காலாட்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. அநுராதபுர மன்னர்கள் நாட்டின் பாதுகாப்புக் கருதி மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தருக?

- அநுராதபுரம், மதில், வாயில் கதவு என்பவற்றுடன் முழுமையான பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருந்தது.
- உள்நாட்டு, வெளிநாட்டு பகைவர்களின் ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டைப் பாதுகாக்க கோட்டைகளையும், காவலரண்களையும் அமைத்தனர்.
- பாதுகாப்பு இடங்களில் காவலரண்களை அமைக்கும் பாதுகாப்பு உபாயங்கள் இருந்தன.

30. அநுராதபுர அரச கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது மன்னர்கள் கவனத்தில் கொண்ட விடயங்கள் எவை?

- நாட்டின் பாதுகாப்பைத் திட்டமிடல்.
- சட்டத்தையும் சமாதானத்தையும் பேணல்.
- பொருளாதார மேம்பாட்டை உருவாக்குதல்
- புத்த சாசன முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

31. அநுராதபுர யுகத்திற்குரிய கல்வெட்டுகளில் கூறப்படும் பல்வகைச் சட்டங்களைத் தருக?

- காணி உரிமை குறித்த சட்டம்.
- வர்த்தகம் சம்பந்தமாக சட்டம்
- விவசாயம் மற்றும் வரி சம்பந்தமான சட்டம்
- குற்றவியல் குறித்த சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. 10ம் நூற்றாண்டுக்குரிய சட்ட திட்டங்களைப் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு ''வேவல் கட்டிய கல்வெட்டுஆகும்'' இக்கல்வெட்டு தொடர்பான விடயங்கள் யாவை?

- பத்து கிராமம் மற்றும் குற்ற வழக்குகளை தீர்ப்பதற்கான சட்டதிட்டங்கள்.
- இக்கல்வெட்டுகளின் பல பிரதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- இச்சட்டங்கள் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன என இதன் மூலம் தெளிவாகின்றது.

33. அந்தானித் தூண் கல்வெட்டில் குறிப்பிடப் பட்ட விடயங்கள் யாவை?

- அரச கொடுப்பனவுகள்.
- மன்னர்கள், உயர் அதிகாரிகள், சில நபர்கள், தனி நிறுவனங்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்ட விசேட அதிகாரங்கள் / வரப்பிரசாதங்கள் பற்றிக் குறிப்பிடப்பட்டது.

34. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக மன்னர்கள் மேற்கொண்ட நடவடிக்கை களைத் தருக?

- குளங்கள் அமைத்தனர்.
- கால்வாய்களை அமைத்தனர்.
- நீரைத் திசை திருப்பினர்.
- நீர் வழங்கல் மற்றும் விவசாய நடவடிக்கை களைப் பேணினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. பெரசிரித என்றால் என்ன?
நிர்வாக நடவடிக்கையின் போதும் மேலும் வரி விதிக்கும் போதும் மன்னர்களால் கடைப் பிடிக்கப்பட்டு வந்த கொள்கை.
(கல்வெட்டுகளின் மூலம் உறுதி செய்யப்படுகிறது)

36. நான்காம் மகிந்தனின் மிகிந்தலை சுவர்க் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டவை பற்றித் தருக?
- அடிப்படை முகாமைத்துவம் பற்றிக் குறிப்பிடுகின்றது.
- மிகிந்தலை விகாரை நிர்வாகம்.
- பௌத்த குருமார்கள் பின்பற்ற வேண்டிய பழக்க வழக்கங்கள்.
- விகாரைக்கு கிடைக்கும் வருமானத்தினை ஆவணத்தில் பதிய வேண்டும்.
- விகாரையின் செயற்பாடுகளுக்காக நாள்தோறும் செலவாகும் செலவினைப் பதித்தல். இது கணக்குப் புத்தகத்தில் (பஞ்ஷிகர) எழுதப்பட வேண்டும்.
- எழுதி வைக்கப்பட்டவை அதிகாரிகளின் கையொப்பத்தைப் பெறல் வேண்டும்.
- வருட இறுதியில் வருடாந்த வரவு, செலவு ஆவணம் தயாரிக்கப்பட வேண்டும்.

37. அநுராதபுர மன்னர்கள் சமூக நலன்புரி நடவடிக்கையில் விசேட கவனம் செலுத்தியுள்ளனர் என்பதற்கான சில எடுத்துக்காட்டுகளைத் தருக?
- புத்ததாச மன்னர் சகல பத்து கிராமங் களுக்கு ஒவ்வொரு வைத்தியர் வீதம் நியமித்து மருத்துவம் செய்வித்தமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1ம் உதய மன்னன் பொலனறுவையிலும் பதவியாவிலும் வைத்தியசாலைகளை நிறுவி அவற்றை நடாத்திச் செல்வதற்கு காணிகளை வழங்கியமை.
- முதலாம் உபதிஸ்ஸ மன்னன் பார்வை இழந்தவர்களுக்கும், நோயாளிகளுக்கும் வைத்தியசாலைகளையும் தானசாலை களையும் நிறுவியமை.
- 5ம் காசியப்ப மன்னன் தொற்று நோயாளி களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அநுராதபுரத்தில் வைத்தியாசாலையை நிறுவியதுடன நகரத்தில் சிகிச்சை நிலையங்களை அமைத்தமை.

**38. பௌத்த சாசனத்தின் அபிவிருத்திக்கு இந்நாட்டு மன்னர்கள் ஆற்றிய சேவைகள் நான்கினைக் குறிப்பிடுக?**

- இலங்கையை ஆட்சிபுரிந்த மன்னர்கள் பௌத்த குருமாரை தம் ஆட்சிக்கு உதவி புரியும் அறிவுரையாளராக நியமித்தனர்.
- விகாரைகளை நிறுவியதுடன் அவற்றை நடாத்திச் செல்ல கிராமங்களை வழங்கி யிருந்தனர்.
- பிக்குகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக பிரிவெனாக்களை உருவாக்கியிருந்தனர்.
- புத்த சாசனத்தின் நன்மைக்காக பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. அநுராதபுர யுக பின்னரைக் காலத்தில் இலங்கை மீது செல்வாக்கு செலுத்திய 3 தென்னிந்திய இராச்சியங்களையும் தலைநகரங்களையும் குறிப்பிட்டன.
- ◆ பாண்டிய அரசு (மதுரை)
- ◆ பல்லவ அரசு (காஞ்சிபுரம்)
- ◆ சோழ அரசு (தஞ்சாவூர்)

40. அநுராதபுர இராச்சியம் வீழ்ச்சியடையக் காரணமான சோழ மன்னர்கள் இருவரைக் குறிப்பிடுக? (1017ல் வீழ்ச்சியுற்றது)
- ◆ இராஜராஜன், ◆ இராஜேந்திரன்

41. அநுராதபுர இராச்சியம் வீழ்ச்சியடைந் தமைக்கான காரணிகளைக் குறிப்பிடுக?
- ◆ 5ம் மகிந்தனது ஆட்சி உறுதியின்மை.
- ◆ தென்னிந்திய படையெடுப்புக்களால் அநுராதபுர இராச்சியத்தின் பொருளாதாரம் நலிவுற்றுவிருந்தது.
- ◆ போதிய சம்பளம் கொடுக்க முடியாமை யினால், பாதுகாப்புபடை சிறப்பாக செயற்படவில்லை.

## 1ம் விஜயபாகு / மகாவிஜயபாகு (கி.பி 1055 - 1110)

42. விஜயபாகு மன்னன் அறிமுகத்தை எழுதுக?
- ◆ இளமைப் பெயர் - கீர்த்தி
- ◆ தாய் பெயர் - லோகிதா தேவி
- ◆ தந்தை பெயர் - மஹாசாமி மொஹலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆட்சி ஆரம்பம் - உருகுணை
- சிறுவயதில் பாதுகாப்பு வழங்கியவர் - சித்தரும்பி புதல்னா / புத்தராஜ

**43. விஜயபாகு மன்னர் பற்றி அறிய உதவும் மூலாதாரங்களைத் தருக?**

- மகாவம்சம்
- பனாகடுவ செப்பேடு
- அம்பகமுவ செப்பேடு

**44. உருகுணையில் உருவான எதிர்ப்பு சக்தியினை சோழர்கள் தோற்கடிப்பதற்குக் கையாண்ட தந்திரோபாயங்களைக் குறிப்பிடுக?**

- உருகுணைக்கு படையெடுத்து வளங்களை அழித்தல்.
- உருகுணை அரசிற்கு உரிமை உடையவர்களை கொலை செய்தனர்.

**45. விஜயபாகு மன்னன் பற்றிய வரலாறு கூறும் பனாகடுவ செப்புச் சாசனம் கண்டுபிடிக்கப்பட்ட இடம் யாது?**

மொரவக்க கோறளைக் கிராமம்

**46. 1ம் விஜயபாகு உருகுணைக்கு அரசராகிய படிமுறைகளை எழுதுக?**

- இளமையில் பல துன்பங்களுக்குட்பட்ட மன்னனுக்கு உருகுணையில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தலைவன் புத்தராஜ பாதுகாப்பு வழங்கி உருகுணை ஆட்சி அதிகாரத்தை பெற பாரிய உதவிகள் வழங்கினான்.

- அச்சமயம் உருகுணை ஆட்சியாளனாக இருந்த கேசதாது காசியப்பனோடு போர்புரிந்து வெற்றியடைந்தான்.
- இதன்பின் கதிர்காமத்தை ஆட்சி மையமாகக் கொண்டு 1ம் விஜயபாகு என்ற பெயரில் அரசன் ஆனான்.

**47. இலங்கையை சோழரிடமிருந்து மீட்க விஜயபாகு மன்னன் கையாண்ட தந்திரோபாயங்களை விளக்குக?**

- சோழர்கள் உருகுணை இராச்சியம் மீது படையெடுத்து வரும் போதெல்லாம் விஜபாகு மன்னன் மலையகப் பகுதிக்குத் தப்பிச் சென்றமை.
- தனது அரசியல் அதிகாரத்தை நிலை நாட்டுதற்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றான். (பர்மா நாட்டுடன் நட்புறவு பேணினான்)
- விஜயபாகு மன்னனின் தேசப்பற்றுள்ள போராட்டத்திற்கு மக்கள் இராசரட்டையில் சோழருக்கு வரி தொடுப்பதை நிறுத்தி கிளர்ச்சி மேற்கொண்டிருந்தனர்.

**48. விஜயபாகு பொலனறுவையைச் கைப் பற்றியமை பற்றிக் குறிப்பிடுக?**

- மகாநாககுல பிரதேசத்தில் படைகளை ஒழுங்கமைத்து இறுதியுத்தத்திற்கு திட்டமிட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மூன்று மார்க்கமாகப் படையெடுத்தல்.
- முதலாவது பிரிவு இந்தியாவிலிருந்து வரும் படையினரை தடுக்க மகாதித்த விற்கு அனுப்பப்பட்டது.
- இரண்டாவது பிரிவு உருகுணையில் இருந்து கிழக்குதிசையில் பொலனறுவை யைக் கைப்பற்றும் நோக்கில் சென்றது.
- மூன்றாவது படைப்பிரிவு விஜயபாகு தலைமையில் மத்திய பாதை ஊடாகச் சென்று பொலனறுவையைக் கைப்பற்றியது.

**49. விஜயபாகு மன்னனின் வெளிநாட்டு கொள்கைகளைத் தருக?**

- அயல் நாடுகளுடன் வர்த்தக உறவுகளை மையப்படுத்தி அதிக தொடர்புகளை வைத்திருந்தான்.
- எதிர்காலத்தில் சோழர் இலங்கை மீது படையெடுக்காதவாறு சோழருக்கு எதிரான அரசுகளுடன் நட்புறவு பேணினான்.
- பண்டியநாட்டுடன் நட்புறவை வளர்க்கு முகமாக தனது சகோதரி மித்தா இளவரசியை பாண்டிய நாட்டு இளவரசனுக்கு மணமுடித்துக் கொடுத்தான்.
- கலிங்க நாட்டுடன் நட்புறவை வளர்க்கும் முகமாக திரிலோக சுந்தரி என்னும் கலிங்க இளவரசியினை விஜயபாகு மன்னன் இரண்டாம் தாரமாக திருமணம் செய்தான்.
- மேலைச் சாளுக்கிய அரசிடம் தன் தூதுவர் களை அனுப்பி பரிசுகளை வழங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பர்மா அரசுடன் நட்புறவைப் பேணி இலங்கையில் பௌத்த சாசன வளர்ச்சிக்கு உதவி பெற்றான்.

50. விஜயபாகுவின் சமய நடவடிக்கைகளைத் தருக?
- பர்மாவிலிருந்து பிக்குமாரை வரவழைத்து உபசம்பதா சடங்கினை நடாத்தியமை.
- பொலன்னறுவையில் மூன்றடுக்கு தலதா மாளிகையை அமைத்தமை.
- சிவனொளிபாத மலைக்குச் செல்லும் பாதையை சீரமைத்து, சிவனொளி பாதமலைக்குக் கிராமங்களை வழங்கியமை.
- அநுராதபுரத்திலும், உருகுணையிலும் விகாரைகளைப் புனர்நிர்மாணம் செய்தமை.
- சிவனொளிபாத மலைக்குப பரிபாலனத்திற்கு கிரிமலை எனும் கிராமத்தை வழங்கினான்.
- வட்டதாகே அமைத்து தந்ததாதுவைப் பிரதிஷ்டை செய்தான்.

51. விஜயபாகு மன்னனிடமிருந்து பெறக்கூடிய முன்மாதிரிகளைத் தருக?
- சவால்களுக்கு முகங் கொடுத்து வெற்றி கொள்ளும் தன்மை.
- மன்னனாக முடி சூடிய பின்பும் தனது சிறுவயது துன்பங்களை வெளிப் படுத்தியமை அவரின் நேர்மைக்கு எடுத்துக் காட்டுகின்றது.
- தனக்கு உதவி செய்த புத்தராஜனுக்குப் பல வரப்பிரசாதங்களை வழங்கியதன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் செய்ந்நன்றி என்னும் பண்பினை கற்றுக் கொள்ளமுடிகிறது.

- தோல்விகளைக் கண்டு சோர்வடையமை, முயற்சியைத் தொடர்ந்து செய்தல் வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதை
- தாய்நாட்டினைப் பாதுகாப்பதில் உத்வேகம் கொண்டமை.
- வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளிடமிருந்து பாதுகாக்க விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதை.

**52. விஜயபாகு மன்னனின் உயர்பண்பு தொடர்பாக அம்பேகமுவ கல்வெட்டில் குறிப்பிடப்பட்ட கருத்துகளைத் தருக?**

- மும்மணிக்கு - பணிவிடை
- ஆசான்களுக்கு - அடிபணிதல்
- தார்மிக மக்களுக்கு - மரியாதை
- கல்விமான்களுக்கு - சௌபாக்கியம்
- உறவினர்களுக்கு - அனுசரணை
- நண்பர்களுக்கு - நட்பு
- பகைவருக்கு - தோல்வி
- அனைத்து உயிரினங்களுக்கு - கருணை
- சபைக்கு - அறிவு
- தமக்கு - நிறைவு

## மகாபராக்கிரம பாகு மன்னன்

**53. மகாபராக்கிரமபாகுவின் அறிமுகத்தை தருக?**

- விஜயபாகுவின் சகோதரி மித்தாவின் மூத்த மகன் மானாபரணன் தந்தை ஆவான்.
- தாய்பெயர் இரத்தினாவலி என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிறந்த இடம் தெதிகம ஆகும் (தக்கின தேசத்தின் கேகாலைப் பகுதி)
- பிறப்பினை நினைவு படுத்தும் இடமாக தெதிகம கொட்ட வெஹெர அல்லது சுதிகர சைத்திய விகாரை காணப் படுகிறது..

**54. பராக்கிரமபாகு மன்னனின் பிறப்பானது எத்தகைய சூழ்நிலையில் நிகழ்ந்தது?**

- பாண்டிய, கலிங்க அரச வம்சத்தினிடையே அரசுரிமை குறித்த மோதல்கள் நிகழ்ந்தன.
- நிலையான ஆட்சியின்மை.
- ஐக்கிய இலங்கை இராசரட்டை, தக்கிண தேசம், உருகுணை என மூன்று பிரிவுகளாக பிரிந்து இருந்தன.

**55. பராக்கிரமபாகுவிற்கு எவ்வாறு தக்கின தேசத்து ஆட்சி கிடைக்கப்பெற்றது?**

- தந்தை மானாபரணன் பராக்கிரமபாகுவின் சிறு வயதில் இறந்து போனபின் சிறிய தந்தை கீர்த்தி ஸ்ரீ மேவன் பாதுகாப்பில் வளர்ந்தான்.
- கீர்த்தி ஸ்ரீ மேவன் மொழி, வில் வித்தைக் கலை, யானைப்பயிற்சி போன்ற விடயங் களை கற்பிக்க ஏற்பாடு பண்ணினான்.
- தக்கிண தேசத்து மன்னனான கீர்த்தி ஸ்ரீ மேவன் மரணத்தின் பின்னர் பராக்கிரம பாகுவிற்கு தக்கினதேச அரசுரிமை கிடைத்தது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- தக்கிண தேசத்தில் பராக்கிரமபுரம் என்னும் நகரமொன்றைக் கட்டி எழுப்பினான். (தற்போது பண்டுவஸ்நுவர என்றழைக்கப்படுகிறது).

**56. பொலன்னறுவ மன்னன் விக்கிரமபாகு மரணமடைந்த பின்னர் பொலன்னறு வையில் ஆட்சியைப் பெறுவதற்கு போட்டி யிட்ட மன்னர்களைக் குறிப்பிடுக?**

- இரண்டாம் கஜபாகு
- இரண்டாம் மானாபரணன்
- மகாபராக்கிரமபாகு

**57. பராக்கிரமபாகுவிற்கும் 2ம் கஜபாகுவிற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் பற்றி குறிப்பிடுக?**

முதலில் ஒருவர் இறந்த பின்பு மற்றவருக்கு அரசு உரிமையாகும் என்பதே ஆகும். இந்த உடன்படிக்கை கல்வெட்டில் எழுதப்பட்டது. இது பிற்காலத்தில் குருணாகலில் சங்கமுவ விகாரையில் கண்டுபிடிக்கப்பட்டது. எனவே அது சங்கமுவ கல்வெட்டு என அழைக்கப் பட்டது.

**58. பராக்கிரமபாகு 1153ஆம் ஆண்டு தனது தலைமையில் ஒன்றுபட்ட இலங்கையை எவ்வாறு உருவாக்கினான்?**

- கீர்த்தி ஸ்ரீ மேவன் இறந்ததும் தக்கிண தேசத்தின் மன்னனான்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- பொலன்னறுவையை ஆட்சி செய்த 2ம் கஜபாகுவுடன் உடன்படிக்கை மேற்கொண்டான்.
- 2ம் கஜபாகு மன்னன் மரணத்தின் பின் 2ம் மானாபரணைத் தோற்கடித்து பொலன்னறு வையின் ஆட்சியைக் கைப்பற்றினான்.
- 2ம் மானாபரணனின் தாய் சுகலாதேவி பராக்கிரமபாகுவிற்கு எதிராகப் போர் புரிந்தாள்.
- சுகலாதேவியைச் தோல்வியுறச் செய்து ஆட்சியின் சின்னமாக விளங்கிய தந்த தாது, பாத்திரதாது என்பவற்றை தன்வசம் பெற்றுக் கொண்டான்.
- இவ்வாறாக ஒன்றுபட்ட இலங்கையை உருவாக்கினான்.

59. பராக்கிரம பாகுவின் பொருளாதார நடவடிக்கைகளைத் தருக?

- தெதுறு ஓயாவின் நீரை விவசாயத்துக்குப் பயன்படுத்தும் பொருட்டு அணைகட்டி நீரைத் திசை திருப்பினான்.
- வம்சக் கதைகளில் கொட்டபத்த, சூக்கர நிஜ்கர, தோரதக்கிரத என்பனவே அவ்விடங்கள் என குறிக்கப்பட்டுள்ளன.
- சிறிய குளங்களை பெருப்பித்தான்.
- அணைகளைச் சீர்திருத்தம் செய்வித்தான்.
- களுகங்கை, பெந்தர கங்கை என்பவற்றுக் கிடையே அமைந்துள்ள பஸ்துன் கோரளையில் சதுப்பு நிலங்களின் நீரை வழித்தடைச் செய்து அந்த இடங்களை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தி செய்தான்.

- இவனது நீர்ப்பாசனப் பாணியில் பொலன்னறுவையில் அமைந்துள்ள பராக்கிரமபாகு சமுத்திரம் சிறப்பிடம் பெறுகிறது.
- தோப்பவாவி, தும்புடுலுவாவி ஆகியவற்றை இணைத்து பராக்கிரம சமுத்திரம் நிறுவப்பட்டது.
- இவனது காலத்தில் 3910 கால்வாய்க்கும் 163 குளங்களுக்கும் அமைக்கப்பட்டதாக சூளவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- "வானிலிருந்து விழும் ஒரு துளி நீரையேனும் வீணாகக் கடலை அடையக் கூடாது" எனும் கொள்கையுடனேயே இவனது பொருளாதாரப் பணி முன்னெடுக்கப்பட்டது.

60. பராக்கிரமபாகுவின் சமயப் பணிகளை (சாசனப் பணிகள்) குறிப்பிடுக?

- பௌத்த சமயத்தின் மேம்பாட்டின் பொருட்டு அரும் பணியாற்றினான்.
- பிக்குகளின் முப்பிரிவினரையும் ஒற்றுமைப் படுத்தினான்.
- பொலன்னறுவை "கதிகாவத ஒழுக்கக் கோவையை" நிறுவுவதில் முன்னின்று செயற்பட்டான்.
- உத்தரராம எனும் விகாரையில் உள்ள கற்றூணில் இது எழுதப்பட்டுள்ளது.
- பொத்குல்விகாரை, பொலன்னறுவை கிரி விகாரை, பபலு விகாரை என்பன போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகாரைகளை நிறுவினான்.

- அனுராதபுரத்திலுள்ள விகாரைகள் பலவற்றை புனர்நிர்மாணம் செய்தான்.

61. **பராக்கிரமபாகு மன்னனின் வெளிநாட்டு கொள்கைகள் தொடர்பான தகவல்களைத் தருக?**

- பர்மா, தென்னிந்திய நாடுகளுடன் தொடர்புகளை வைத்திருந்தான்.
- நீண்டகாலமாக பர்மா (ராமஞ்ஞதேசம்) நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் இருந்த தொடர்பு அப்போதய பர்மிய மன்னன் அலவுங்சித் என்பவனின் நடவடிக்கை காரணமாகப் பாதிக்கப் பட்டது.
- கி.பி.1164ம் ஆண்டு நகரகிரி கீர்த்தி என்பவன் தலைமையில் கடற்படை ஒன்றை பர்மாவுக்கு அனுப்பி வெற்றி கண்டான்.
- இதற்கு கைமாறாக நகரகிரி கீர்த்திக்கு கிராமங்களை அன்பளிப்பு செய்துள்ளான் என தெவனகல கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது.
- இந்தியாவில் பாண்டிய அரசுரிமை மோதலில் தலையிட்டு பராக்கிரம பாண்டியனுக்கு உதவி புரிந்தான்.
- லங்காபுர, ஜகத்விஜய ஆகிய இரு சேனாதிபதிகளின் கீழ் படையொன்றை அனுப்ப நடவடிக்கை எடுத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. நிஸங்கமல்லன் எவ்வாறு ஆட்சியுரிமை பெற்றுக் கொண்டான்?

- 1ம் பராக்கிரமபாகுவிற்கு குழந்தைகள் இன்மையால் சகோதரியின் மகனான 2ம் விஜயபாகுவிற்கு ஆட்சி கிடைத்தது.
- மகிந்த என்பவன் 2ம் விஜயபாகுவைக் கொன்று ஆட்சிபிடம் ஏறினான்.
- உபராஜாவாக இருந்த நிஸங்கமல்லன் மகிந்தனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினான்.

63. நிஸங்கமல்லன் பிறப்பு தொடர்பான தகவல்களைத் தருக?

- பிறந்த இடம் - இந்தியா (கலிங்கதேசம்)
- தந்தை - ஜயகோப மன்னன்
- தாய் - பார்வதி தேவி

64. நிஸங்கமல்லன் எதிர்கொண்ட சவால்கள் எவை?

- வெளிநாட்டுப் பூர்வீகம்
- பராக்கிரமபாகுவின் சிறந்த சேனாதிபதிகளைத் தன் வசப்படுத்தல்.
- பாண்டியர்களின் எழுச்சியைத் தடுத்தல்.
- உருகுணையைத் தன்வசமாக்கிக் கொள்ளல்.
- சிம்மாசனத்திற்கு உரிமை கோரிய இளவரசர்கள் எதிராக செயற்பட்டனர்.

65. நிஸங்கமல்லன் தனக்கு ஏற்பட்ட சவால்களுக்கு எவ்வாறு முகம் கொடுத்தான் என எழுதுக?

- மக்களின் மனதைக் கவரும் வகையில் நாடுமுழுவதும் பிரயாணம் செய்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீண்ட கல்வெட்டுக்கள் அமைத்து மக்களுக்கு அறிவுரை வழங்கினான்.
- தம்புள்ளவிகாரை, சிவனொளிபாதமலை என்னுமிடங்கள் அவன் யாத்திரை செய்த இடங்களுக்கு எடுத்துக் காட்டாகும்.
- துலாபாரக் கொடைகளை வழங்கினான். (ஒருவரின் உடல்நிறைக்கு சமனாக வழங்கப்படும் கொடை)
- மக்களின் வரிச்சுமையை நீக்கினான், வரிச்சலுகைகளை வழங்கினான்.
- திருடர், பகைவர் தொல்லைகளை நீக்கினான்.

**66. நிஸங்க மல்ல மன்னனது செயற்பாடுகள் பற்றி குறிப்பிடும் கல்வெட்டுகளைத் தருக?**

- கல்பொத்த கல்வெட்டு
- பொலன்னறுவை அட்டதாகே கல்வெட்டு
- தம்புள்ள பாறைக் கல்வெட்டு
- வாதுருப்பே கல்வெட்டு

**67. நிஸங்க மல்ல மன்னனது சமயப் பணிகளைத் தருக?**

- தந்ததாதுவை வைக்கும் பொருட்டு ''அட்டதாகே'' எனப்படும் தலதா மாளிகையை நிறுவினான்.
- ரன்கொத் விகாரை, வட்டதாகே போன்ற விகாரைகளை அமைத்தான்.
- தம்புள்ள விகாரையைப் புனரமைத்து அங்குள்ள புத்தர் சிலைகளுக்கு தங்கமுலாம் பூசுவித்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிக்குகள், பிராமணர்கள் ஆகியோருக்கு நிலம், உடை, உணவு என்பவற்றை தானமாக வழங்க ஏற்பாடு செய்தான்.
- பௌத்த சங்கத்தில் வாழ்ந்த ஒழுங்கற்ற மதகுருமாரை நீக்கினான்.
- இந்து மதத்திற்கு ஆதரவு வழங்கினான். கந்தளாய் பார்வதி சத்திரத்திற்கு தானங்கள் வழங்கினான்.

**68. நிஸங்க மல்ல மன்னனின் சமயச் சார்பற்ற நிர்மாணங்கள் சிலவற்றை எழுதுக?**

- நிஸங்கலதா மண்டபம்
- நிஸங்க மல்ல இராஜ சபை

**69. நிஸங்கமல்ல மன்னனின் இராஜசபையின் கற்றூண்களில் குறிக்கப்பட்டிருக்கும் விசேட அம்சம் யாது?**

- அதிகாரிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு இருக்கைகள் ஒதுக்கப்பட்டிருக்கும்.
- அரசன் அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் போது தளபதிகள் அமரும் இடங்கள் குறிக்கப்பட்டிருக்கும்.

**70. நிஸங்க மல்லனின் பொருளாதாரப் பணிகள் சிலவற்றை குறிப்பிடுக?**

- வரிச்சுமையை குறைத்தான்.
- பாண்டி விஜயக்குளம் அமைத்து நீர்ப்பாசனத்தையும் அபிவிருத்தி செய்தான்.
- நிஸங்க சமுத்திரத்தை வெட்டியதாக கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பராக்கிர சமுத்திரத்தை புனரமைப்பு செய்ததாகவும் வரலாறு கூறுகிறது.

71. **நிஸங்கமல்ல மன்னனின் சாதனைகளைப் பட்டியலிடுக?**
   - நாட்டின் அரசியல் உறுதியை ஏற்படுத்தி அமைதியை நிலை நாட்டினான்.
   - இலங்கை வரலாற்றில் அதிகளவு கல்வெட்டுக்களையும், மிக நீண்ட கல்பொத்த கல்வெட்டினையும் பொறித்தான். (8 மீற்றர் நீளம், 4 மீற்றர் அகலம்)
   - ஹட்டதாகே எனும் பற்சின்னத்தை வைப்பதற்காக கட்டடத்தை உருவாக்கினான்.
   - 180 அடி உயரமும் 550 அடி சுற்றளவுடைய ரன்கொத் தாபகத்தை நிறுவினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அலகு 03*

# எமது கலாசார மரபுரிமைகள்

**01. கலாசார மரபு உரிமை என்பதனால் கருதப்படுவது யாது?**

எமது முன்னோர்களால் கட்டப்பட்ட குளங்கள், அணைக்கட்டுகள், கட்டிடங்கள், பூங்காக்கள், வரலாற்று இடங்கள், அரச மாளிகைகள், கோட்டைகள், கலையாக்கங்கள், மற்றும் பரம்பரையாக நடைமுறையிலுள்ள பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள், நம்பிக்கைகள், நாட்டார் பாடல்கள், கர்ண பரம்பரைக் கதைகள், சம்பிரதாய வைத்திய முறைகள் என்பவை அனைத்தையும் கலாசார உரிமை எனலாம்.

**02. கலாசார மரபுரிமைகள் மூலம் அறிய முடிகின்ற தகவல்களை எழுதுக?**

- புராதன காலத் தொழில்நுட்பம் பற்றி அறிய முடிகிறது.
- முன்னோர்களின் பண்பாட்டம்சங்களை அறியலாம்.
- கலைநுட்பங்களை அறிய முடியும்.
- வைத்திய முறைகளை அறிய முடிகிறது.
- சில சந்தர்ப்பங்களில் இன்று நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணமுடிகிறது. (உ+ம்) : வைத்திய முறை, பயிர்ச்செய்கையில் பயன்படுத்தப் படும் சடங்கு சம்பிரதாயங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வரலாற்று தகவல்களுக்கான மூலாதாரங் களாகவும் பயன்படுகின்றன.

03. கலாசார மரபுரிமைகளின் வகைகளைக் குறிப்பிடுக?
- தொட்டுணரக் கூடிய கலாசார மரபுரிமைகள்
- தொட்டுணர முடியாத கலாசார மரபுரிமைகள் (தொட்டுணரமுடியாத கலாசார மரபுரிமைகள் என்பது பரம்பரை பரம்பரையாக உரிமைகளான பழக்க வழக்கங்களாகும்.)

04. தொட்டுணரக் கூடிய கலாசார மரபுரிமை களைத் தருக?

சமய வழிபாட்டுத் தலங்கள், வரலாற்றுக் கட்டிடங்கள், அரச மாளிகைகள், கலை அம்சங்கள், கோட்டைகள், அணைக்கட்டுக்கள், பூங்காக்கள், குளங்களும் அதன் உறுப்புக் களும், கால்வாய்கள், பழைய நூல்கள்.

05. தொட்டுணர முடியாத கலாசார மரபுரிமை களைக் குறிப்பிடுக?
- வேறுபட்ட இனமக்களுக்கான வேறுபட்ட சம்பிரதாய முறைகள்.
- நாட்டார் மொழி வழக்கும், கருத்து வெளிப்பாடும்.
- நாட்டார் பாடல்கள், அரங்கக் கலை.
- மரபுரீதியான கலைநுட்ப அறிவு.
- வழிபாட்டு முறைகள்.
- இயற்கையும் சுற்றாடலிலிருந்து பெறும் அறிவும் பழக்கமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06. இலங்கையில் காணப்படும் கலாசார மரபுரிமைகள் தொடர்பில் இந்நாட்டு மக்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய சிறப்புக்களைத் தருக?**

- மேம்படைந்த நீர்ப்பாசன முறையின் மூலம் எமது நாட்டின் தனித்துவத்தை உலகிற்கு காட்ட முடிகிறது.
- கலாசார மரபுரிமைகள் எம்மிடம் உள்ளதால் பெருமை மிக்க இனமாக உலகில் நாம் விளங்குகின்றோம்.
- பல்வேறு கலாசாரங்களில் நாம் முன்னணியில் இருப்பதனால் இலங்கையின் தனித்துவத்தை காண்பிக்க முடிகிறது.
- கலாசார மரபுரிமை எமது நாட்டின் பண்டைய பெருமையை உலகிற்கு வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

**07. உலக மரபுரிமை பற்றி குறிப்பிடுக?**

ஒரு நாட்டிற்கு மட்டுமன்றி முழுமனித குலத்திற்கும் உரித்தான மரபுகளையே உலக மரபுரிமை எனக் குறிப்பிடுகின்றோம்.

08.

**அ) உலக மரபுரிமைச் சின்னங்களைப் பேணிப் பாதுகாக்கும் நிறுவனம் யாது?**

யுனெஸ்கோ (ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாசார நிறுவனம்)

**ஆ) இந்நிறுவனம் எந்த ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது?**

16.11.1945ல் ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. உலக கலாசார மரபுரிமைகளைத் தெரிவு செய்யும் போது யுனெஸ்கோ கவனம் செலுத்துகின்ற விடயங்களைக் குறிப்பிடுக?

- மனிதனின் உன்னதமான ஆக்கத்திறன் அல்லது அறிவினை வெளிப்படுத்தும் ஆக்கங்கள்.
- யாதாயினுமொரு கலாசாரத்திற்கு உரித்தான கட்டடங்கள் நகர அமைப்பு, கலை, தொழில்நுட்பம் என்பவற்றின் வளர்ச்சியை காட்டும் ஆக்கம்.
- தற்போது காணப்படும் அல்லது அழிந்துள்ள பண்பாட்டில் அவ்வாறு பண்பாடு நிலவியமையைக் காட்டும் சான்றாக இருத்தல்.
- மனித வரலாற்றில் முக்கிய சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டும் கட்டிடங்கள் அல்லது தொழில்நுட்பம் தொடர்பானவையாக இருத்தல்.
- தவிர்க்க முடியாத காரணங்களால் அழிவுக்கு உள்ளாகும் அச்சுறுத்தல் களுக்கு உள்ளான பழைய பண்பாட்டு நிலங்கள் அல்லது சமூக வசிப்பிடங்கள் அல்லது அதற்குரிய நினைவுச் சின்னமாக இருத்தல்.

10. உலக கலாசார மரபுரிமைகளில் முறையே நகர அமைப்புக்கும், பண்டைய பாதுகாப்பின் சுவராகவும் அங்கீகரிக்கப்பட்டவை எவை?

- நகர அமைப்பு - மொஹஞ்சதாரோ
- பாதுகாப்புச் சுவர் - சீனப் பெருஞ்சுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. உலக கலாசார மரபுரிமைகளுக்காக யுனெஸ்கோ நிறுவனத்தால் இலங்கையில் இனங்கண்ட இடங்கள் ஆறினையும் தருக?

- பழைய அநுராதபுர நகரம்
- பழைய பொலனறுவை நகரம்
- சீகிரியா
- ரன்கிரி மாளிகை குகை விகாரை
- தலதா மாளிகை உள்ளிட்ட கண்டி நகரம்
- காலி கோட்டை

12. பழைய அநுராதபுர நகரில் காணப்படும் முக்கியமான கட்டிடங்களைக் குறிப்பிடுக?

- ஸ்ரீ மகாபோதி
- ரூவான் வெலிசாய
- லோவமகாபாய
- அபயகிரி
- ஜேத்தவன ராம
- குட்டம் பொய்கை (இரட்டைத் தடாகம்)
- இசுறுமுனி

13. பழைய அநுராதபுர நகரில் காணப்பட்ட பூங்காக்களைத் தருக?

ரன்மசு, உயன பூங்காக்கள்

14. பழைய பொலனறுவை நகரத்தில் காணப்படும் பௌத்த இந்து நினைவுச் சின்னங்கள் எவை?

- வட்டதாகே
- திவங்க சிலை மனை
- ரன்கொத் விகாரை
- கிரி விகாரை
- லங்காதிலக
- நிஸங்கலதா மண்டபம்
- கல்விகாரை
- சிவதேவாலயம்
- சத்மஹல் பிரசாத
- பராக்கிரம சமுத்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. அநுராதபுரம், பொலனறுவை ஆகியன உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்ட ஆண்டுகளைக் குறிப்பிடுக?

அநுராதபுரம் - 1982ம் ஆண்டு
பொலனறுவை - 1982ம் ஆண்டு

16. "சிகிரியா உலக மரபுரிமைப் பட்டியலில் 1982ம் ஆண்டு சேர்க்கப்பட்டது" சிகிரியா பற்றி நீர் அறிந்த விடயங்களை எழுதுக?

- சிகிரியாக் கோட்டையானது காசியப்ப மன்னனால் நிறுவப்பட்டது.
- அகழிக்கோட்டை, நீர்ப்பூங்கா, அரச மாளிகை, கலைக்கூடம் என்பவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது.
- சிகிரியா உலகின் எட்டாவது அதிசயமாகக் கருதப்படுகிறது.

17. தம்புள்ள ரஜமகாவிகாரை சிறப்புப் பெறக் காரணமானவற்றைத் தருக?

- சித்திரங்களுடனான பாரிய குகை விகாரையாகக் காணப்படுகின்றமை.
- இயற்கையான கல்லினுள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- பௌத்த விகாரை, இது மிகவும் குளிர்ச்சியான ஆரோக்கியமான இடமாகும். (குறிப்பு :- இவற்றின் காரணமாக 1991ம் ஆண்டு உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. 1988ம் ஆண்டு உலக மரபுரிமைப் பட்டியலில சேர்க்கப்பட்ட காலிக் கோட்டை பற்றிய விபரங்களைத் தருக?

- போர்த்துக்கேயரால் சிறிய அளவில் கட்டப்பட்ட இக்கோட்டை ஒல்லந்தரால் பாதுகாப்பு அரணாகப் பலமிக்கதாகக் கட்டப்பட்டது.
- ஒல்லாந்தர் கட்டிடக்கலை மரபு காணப் படுகின்றது.
- தொல்பொருள்கள், நினைவுச் சின்னங்கள் என்பன இங்கு காணக் கூடியதாக உள்ளது.
- தென்கடற்கரையின் அழகிய சுற்றாடலில் அமைந்துள்ளது.
- முதலில் காலிஜிம் தீர்த்த என அழைக்கப் பட்டு வந்ததாகவும்,14ம் நூற்றாண்டுகளில் அரேபிய யாத்திரைகளுக்காக இபன் பதூதா காலி எனத் தனது குறிப்புக்களில் குறிப்பிட்டுள்ளார்.

19. கண்டி நகரம் 1988ம் ஆண்டு உலக மரபுரிமையாகப் பிரகடனப்படுத்துவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக?

- கண்டி நகரின் தொன்மையான வரலாறு.
- காணப்படும் கட்டிடங்கள்.
- அந்நகரைச் சுற்றிலும் இடம்பெறும் சமய பண்பாட்டுச் செயற்பாடுகள்.
- தலதா மாளிகை, பழைய அரச மாளிகை, மகுல் மடுவ மண்டபம் என்பன.
- கண்டியில் நடைபெறும் பெரஹரா ஊர்வலம், பண்டைய பழக்க வழக்கங்கள், சம்பிரதா யங்கள், பாரம்பரிய கலை அம்சங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. வியத்தகு சிகிரியா எனப் பெயர் பெற்ற பின்னணி யாது?

காசியப்பன் தனது தந்தையான தாது சேன மன்னனைக் கொன்று அரசினைப் பெற்றுக் கொண்டான். தனது சகோதரன் முகலனுக்குப் பயந்து பாதுகாப்புக் கருதியே சிகிரியாக் குன்றில் அரண் ஒன்றைக் கட்டியதாக மூலாதாரங்களில் குறிப்பிடப்படுகின்றது.

21. சிகிரியாக் கட்டிடக் கலைச் சிறப்புக் களைக் குறிப்பிடுக?

- கடல் மட்டத்திலிருந்து 1214 அடி உயரத்தில் அமைந்துள்ள மலையில் உள்ள கற்பாறையின் உச்சியில் பழைய அரச மாளிகைகள், கட்டிடங்கள் அமைக்கப் பட்டுள்ளன.
- உச்சிவரை அமைக்கப்பட்ட படிக்கட்டு, பாலம், பாதுகாப்புச் சுவர் என்பவை வியப்புக்குரிய நிர்மாணமாகக் காணப் படுகின்றன.
- பாறையின் கடினமான பகுதிக்கு ஏறுவதற்கு இருந்த வழி சிங்கத்திலிருந்து ஆரம்பமாகின்றமை போன்ற கட்டிட அமைப்புக்கள்.
- போக்குவரத்துப் பாதையின் பாதுகாப்புக் கருதி அமைக்கப்பட்ட நீண்ட பாதுகாப்புச் சுவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**22. "சிகிரியா கிறுக்கல் கவிதைகள்" என்றழைக்கப் படுவது யாது?**

சிகிரியாவில் காணப்படும் பளிங்குச் சுவர்களில் (கண்ணாடிச் சுவர்) எழுதப்பட்ட கவிதைகளே சிகிரியாக் கிறுக்கல் கவிதைகள் எனப் படுகின்றன.

**23. சிகிரியாப் பூங்கா பற்றி எழுதுக?**

சிகிரியாக் குன்றின் உச்சியில் நின்று பார்க்கும் போது மேற்குப் பிரதேசத்தில் "மகுல் உயன" என்ற பூங்கா பரந்துள்ளது. அதனை பரண விதாரண எனும் தொல் பொருள் ஆய்வாளர் "பிரமத வனம்" எனப் பெயரிட்டுள்ளார்.

**24. சிகிரியா ஓவியங்கள் பற்றிய சிறப்புக்களை எழுதுக?**

- 1500 ஆண்டு பழமை வாய்ந்த ஓவியமாகும்.
- குன்றின் உட்குழிவின் இடத்தில் காணப் படும் பெண்களின் உருவங்கள் மேகங் களிலிருந்து வெளிப்படுவதாக வரையப் பட்டுள்ளது.
- சிகிரியா ஓவியத்தில் மஞ்சள், கபிலம், சிவப்பு, நீலம் போன்ற நிறங்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டன.
- சிகிரியா ஓவியத்திலுள்ள பெண்கள் உருவங்களை மேகலத்தா எனக் குறிப்பிட்டுள்ளன.
- ஆனந்த குமாரசுவாமி சீகிரியா ஓவியத் திலுள்ள பெண்களை தேவலோகக் கன்னிகள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**25. சிகிரியாவின் சிறப்புக்களில் ஒன்றான நீர்மலர் அமைப்பு பற்றி குறிப்பிடுக?**

- வேகமாகப் பாய்ந்தோடும் நீர்ப் பாய்ச்சலுக்குத் தடை ஏற்படுத்தல் மூலம் நீரினை மேலே எழச் செய்யலாம் என்ற விஞ்ஞான எண்ணக்கரு பயன்படுத்தப் பட்டுள்ளது.
- குளங்களில் இருந்து கீழே பாய்ந்து வரும் நீர் துளை செய்த கற்களினூடாக பாய்ந்து நீர்ப்பூங்காவினை அலங்கரிக்கின்றது.

**26. யுனெஸ்கோ நிறுவனம் இனங்கண்ட ஐந்து தொட்டுணர முடியாத கலாசார மரபுரிமை களைத் தருக?**

- நாட்டார் மொழி வழக்கும் கருத்து வெளிப் பாடும்.
- அரங்கக் கலைகள், நாட்டார் பாடல்கள், நாட்டார் இசை
- சமூகப் பழக்க வழக்கங்கள் வழிபாடுகள், நம்பிக்கைகள், விழாக்கள்
- இயற்கையும் சுற்றாடலிலிருந்து பெறும் அறிவும் பழக்கமும்
- மரபு ரீதியான கலை நுட்பங்கள்

**27. நாட்டார் மொழி வழக்கும் கருத்து வெளிப் படும் என்பதனை சுருக்கமாக விளக்குக?**

- தமிழ்மொழி நீண்டகாலமாக பயன் படுத்தப்பட்டு வந்தமை, 2500 ஆண்டுகள் சிங்கள மொழி பேசப்பட்ட வந்ததாலும் அவற்றுக்கு உரித்தான மொழி அமைப்புக் கள் உருவாகியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உவமைகள், உருவகங்கள், பழமொழிகள் போன்றவற்றால் இம்மொழிகள் ஊட்டம் பெறுகின்றன.
- சிங்கள மொழியானது தமிழ்மொழியினாலும், முற்காலத்தில் நிலவிய ஏனைய மொழிகளினாலும் தாக்கம் பெற்றுள்ளது. தமிழ்மொழியும் சமகால ஏனை மொழிகளின் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளது.
- எனவே மொழியைக் கையாள்வது தொடர்பாக இலங்கைக்கே உரித்தான நடைமரபு நிலவுகின்றது. இது ஒரு தொட்டுணர முடியாத மரபுரிமைகள் ஆகும்.

**28. அரங்கக்கலை என்பதை விளக்குக? அரங்கக்கலை இந்நாட்டில் பாரம்பரியம் பேணப்பட்டு வந்தது என்பதற்கு எடுத்துக் காட்டுக்களைத் தருக?**

- ருவன் வெலிசாயவுக்கு அடிக்கல் நாட்டும் வைபவத்திற்கு துட்டகைமுனு மன்னன் நடனப்பெண்களும் வாத்தியங்களும் கொண்ட குழுவினரால் அழைத்து வரப்பட்டதாக மகாவம்சம் கூறுகின்றது.
- விழாக்களுக்கு சிறப்பு அதிதிகளை அழைத்து வரும் போது ஆடல், பாடல், வாத்தியம் என்பன முழங்கப்பட்டது.
- 1ம் பராக்கிரமபாகு மன்னன் காலத்திலும் ஆடல், பாடல் நிலவியதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1ம் பராக்கிரமபாகுவின் மனைவி ரூபாவதி ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கினாள் என மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

29. நாட்டார் பாடல்கள் பற்றிய குறிப்புக் களைத் தருக?
    - பல்வேறு பிரதேங்களுக்கு உரித்தான பாடல்களாக உள்ளன.
    - முதியோர்களால் பாடப்பட்ட பாடல்கள், செவிமடுத்தல் மூலம் தற்போதய பரம்பரைக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.
    - நாட்டார் பாடல்களானது பரம்பரையாக வந்த தொட்டுணரமுடியாத மரபுரிமை எனக் கொள்ளலாம்.
    - நாட்டார் பாடல்களைப் பாடியவர்கள் பாடப்பட்ட காலம் என்பது பற்றி பெரும்பாலும் அறியமுடியாததாகவே உள்ளது.

30. நாட்டார் பாடல்களின் வகைகள் பற்றி எழுதுக?
    - பண்டைய விவசாயப் பாடல்கள்
    - மீனவர் பாடல்கள்
    - சுரங்கப் பாடல்கள்
    - பெற்றோர் பெரியோரின் குறை நலன்களை எடுத்துரைக்கும் பாடல்கள்
    - தாலாட்டுப் பாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. நாட்டார் பாடல்கள் பாடப்பட்டதன் நோக்கங்கள் யாவை?
- இளைய பரம்பரையினரை நல்வழிப் படுத்துவது
- பசியை வெளிப்படுத்துவது
- உறவினரிடையே தொடர்பை வெளிப் படுத்தல்
- களைப்பை போக்குவதற்கு
- தனிமையை நீக்குவதற்கு

32. தொட்டுணர முடியாத மரபுரிமைகளும் சமூகப்பழக்கவழக்களும் நம்பிக்கைகளும் பற்றி எழுதுக?
- விகாரைகள் மற்றும் வழிபாட்டுத்தலங்கள் என்பவற்றிற்கு செல்வதற்கு முன்னர் காலணிகள், தலைக்கவசங்கள் என்பவற்றை கழற்றுதல்.
- பெற்றோர்கள் ஆசிரியர்களை வணங்குதல், மரியாதை செய்தல்.
- கை கழுவி உணவு உண்ணல்.
- ஜீவராசிகளுக்கு கருணை காட்டுதல்.
- ஏழை எளியோருக்கு உதவுதல்.

33. ஒருவர் பிறப்பு முதல் கல்வி நடவடிக்கை களை ஆரம்பிக்கும் வரை செயற்படுத்த வேண்டிய சடங்குகள் பற்றி இந்து நூல்களில் குறிப்பிடப்பட்டவை எவை?
- பெயர் வைத்தல்
- காது குத்தல்
- சோறு ஊட்டுதல்
- ஏடு தொடங்குதல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. பண்டைய மனிதனின் அனுபவங்களும் பரம்பரை பரம்பரையாக பின்பற்றப்பட்டவை தொட்டுணரமுடியாத மரபுரிமையாகும் அவற்றுக்கு உதாரணம் தருக?

- ♦ குளங்கள் அமைத்தல்
- ♦ மடைக்கதவுகள், கால்வாய்கள் அமைத்தல்
- ♦ விதை விதைத்தல்
- ♦ பயிரினைப் பாதுகாத்தல்
- ♦ வைத்திய முறைகள்
- ♦ தச்சுத் தொழில்
- ♦ இரத்தினக் கல்தொழில்
- ♦ பயிர்களுக்கு ஏற்படுகின்ற நோய்களுக்கான நிவாரணங்கள்

35. இந்நாட்டின் மரபு ரீதியான கலைநுட்பங்களுக்கு உதாரணங்கள் தருக?

- ♦ சுவரோவியம்
- ♦ பாய் பின்னல்
- ♦ பித்தளைப் பாத்திரங்கள் செய்தல், செப்பமிடல்
- ♦ முகமூடி செய்தல்
- ♦ பொம்மலாட்டம்
- ♦ மெழுகுக் கலை

36. முகமூடி செய்வதில் பிரசித்தி பெற்ற இடங்களைத் தருக?

- ♦ பலாங்கொடை ♦ உடுபில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**37. முகமூடிகள் எக்காரணங்களாகக் பயன் படுத்தப்பட்டன?**

- சாந்திகர்ம சடங்குகளின் பொருட்டு
- கூத்துக்களின் பொருட்டு
- பிசாசுகள், தேவர்களின் உருவங்களைப் பிரதிபலிப்பதற்காக
- பயத்தையும் மகிமையும் காட்டுவதற்கு

**38. "அரக்கு சித்திரக்கலையில் மத்திய மலைநாடு பிரசித்தி பெற்று விளங்குகிறது" இக்கைத்தொழிலுக்கு மூலப்பொருளாக பயன்படுத்தப்படும் பசை எவ்வாறு பெறப்படுகிறது?**

கெப்பெட்டியா செடியில் வாழும் "லாக்ஷா" என்ற சிற்றுயிரினத்திலிருந்து பெறப்படுகிறது.

**39. அரக்குச் சித்திரக்கலை எப்பொருள்கள் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றன?**

ஊன்றுகோல், கைத்தடி, மரத்திலான வெற்றிலைத்தட்டம், மரத்தாலான சாடிகள், வீட்டுப்பாவனைப் பொருட்கள், விசிறிக் கைப்பிடி, ஆலவட்டம், ஏட்டுச்சுவடிகளின் அட்டையலங்காரம் என்பவற்றில் பயன்படுத்தப்படுகின்றன.

**40. எமது பண்பாட்டு பாரம்பரியங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவங்களை எழுதுக?**

- எமது முன்னோரின் படைப்பாக்கம், திறமை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலையாற்றல்கள், பொறியியல் தொழிநுட்ப நிர்மாணங்கள் என்பவற்றை இன்றைய சமூகம் அறிந்து கொள்வதன் மூலமாக நாட்டின் மீது உயர் எண்ணமும் பற்றுதலும் கொள்ள வழி பிறக்கின்றது.

- இலங்கைக்கே உரித்தான கலாசாரத்தினை எடுத்தியம்ப இக்கலாசார மரபுரிமைகளைப் பாதுகாப்பது அவசியமாகும்.
- எமது கலாசார மரபுரிமைகளை எதிர் காலச் சந்ததியினர் அனுபவிக்கும் பொருட்டு பாதுகாக்கப்படுதல் அவசிய மாகும்.
- இவற்றைப் பாதுகாப்பதன் மூலமாக உல்லாசப் பிரயாணிகளைக் கவர்வதன் மூலமாக அந்நியச் செலவாணியைப் பெறுவதுடன் எமது நாட்டின் கீர்த்தி உலகம் முழுவதும் பரம்பச் செய்ய முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அலகு 04*

# பிற்கால ஆட்சி மையங்கள்

**01. அநுராதபுரம், பொலனறுவை என்பன ஆட்சி மையங்களாக எத்தனை ஆண்டுகள் நிகழ்ந்தன எனக் குறிப்பிடுக?**

- அநுராதபுரம் - 1500 ஆண்டுகள்
- பொலனறுவை - 150 ஆண்டுகள்

**02. "இராசரட்டை நாகரீகம்" என்பதனால் கருதப்படுவது யாது?**

அநுராதபுரமும், பொலனறுவையும் இராசதானியாக நிலவிய காலமே இராசரட்டை நாகரீகம் என வழங்கப்பட்டது.

**03. அநுராதபுர இராசதானி வீழ்ச்சியடையக் காரணம் சோழரின் ஆக்கிரமிப்பு போல பொலனறுவை இராசதானி வீழ்ச்சியடைய ஏதுவான காரணிகளைக் குறிப்பிடுக?**

- கலிங்கமாகனின் ஆக்கிரமிப்பு (கி.பி. 1215)
- பலவீனமான மன்னர்கள் ஆட்சி பீடம் ஏறியமை
- கலிங்க பாண்டியர்களிடையே நிலவிய சிம்மாசனப் போராட்டம்.
- பொருளாதார வீழ்ச்சி.
- பராக்கிரம பாண்டிய மன்னனின் திறமை யின்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. கலிங்க மாகன் தெற்கு நோக்கி வருவதற்கு தடையாக இருந்த நாட்டையும் மக்களையும் பாதுகாத்த பிரதேச ஆட்சியாளர்களும் அவர்கள் அமைத்துக் கொண்ட கோட்டைகளையும் தருக?

| <u>ஆட்சியாளர்கள்</u> | <u>கோட்டைகள்</u> |
|---|---|
| சங்க சேனாதிபதி | -மினிப்பேயில் கந்தெனிய குன்றில் அமைத்த கோட்டை |
| சுப சேனாதிபதி | - யாப்பகூவ குன்றின் உச்சியில் உள்ள கோட்டை |
| புவனேகபாகு இளவரசன் | -உறுகுணையின் கோவிந்த மலை |
| வன்னி விஜயபாகு | -தம்பதெனியா |

05. இராசதானிகள் தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்த போது தேவைகளாக இருந்த முக்கிய காரணிகளைக் குறிப்பிடுக?
- ♦ பாதுகாப்புக் காரணிகள்
- ♦ பொருளாதாரக் காரணிகள்

06. தென்மேற்கு இராசதானிகள் காலத்துக்கு காலம் உருவானமைக்குரிய பாதுகாப்பு காரணங்களைத் தருக?
- ♦ அரச உரிமையாளர்களுக்கிடையே காலத்துக்காலம் ஏற்பட்ட மோதல்கள்
- ♦ அந்நிய நாடுகளில் இருந்து எழுந்த ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொலனறுவையில் மாகனின் ஆட்சி நிலவியதால், பாதுகாப்புக் கருதி தூரத்தில் விலகி இருக்க எண்ணியமை.
- காடுகள், குன்றுகள் போன்றன அரண் களாக விளங்கியமை.

07. தென்மேற்கு இராசதானிகள் (தெற்கு வலயத்தில்) காலத்துக்கு காலம் உருவாக ஏதுவான பொருளாதாரக் காரணிகளை எழுதுக?

- உலகில் நிலவிய புதிய வர்த்தக நடவடிக்கைக்கு ஏற்ப வெளிநாட்டு வர்த்தகத்தில் புதிய போக்குகள் ஏற்பட ஆரம்பித்தன.
- மிக்க கேள்வியுள்ள வாசனை திரவியங்கள் விளைவதற்கு தென்மேற்கு ஈரவலயப் பிரதேசங்கள் பொருத்தமானதாக விளங்கியமை.
- இராசரட்டைப் பகுதியின் நீர்ப்பாசனத் தொகுதிகள் அழிவுற்றமை.
- ஈரவலயத்திற்குப் பொருத்தமான படிமுறைச் செய்கைக்கு மக்கள் பழக்கப்பட்டமை.

## தம்பதெனிய இராச்சிய காலம் (கி.பி 1232 - 1272)

08. மூன்றாம் விஜயபாகு மன்னன் தலை நகரமாக்கியதற்குரிய காரணங்களைத் தருக?

- மாகனின் ஆட்சிப் பிரதேசத்திலிருந்து தொலைவில் அமைந்துள்ளமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- குருணாகலுக்கு தென்மேற்கே மலைக் குன்றுச் சாய்வில் பாதுகாப்பான இடத்தில் அமைந்திருந்தமை.

**09. மூன்றாம் விஜயபாகு தம்பதெனியாவை ஆட்சிசெய்த போது இலங்கை எவ்வாறான பிரதேசங்களாகப் பிரிந்து காணப்பட்டன?**

- உருகுணை ♦ பிஹிட்டி ♦ மாயா

**10. மூன்றாம் விஜயபாகு மன்னன் ஆற்றிய பெரும்பணி யாது?**

பௌத்த குருமார் தந்த, பாத்திர தாதுக்களை கொத்மலைக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பான இடத்தில் வைத்திருந்தனர். 3ம் விஜயபாகு மன்னன் இப்புனிதப் பொருட்களை எடுத்துவந்து கேகாலை மாவட்டத்தில் பெலிகலை மலையின் உச்சியில் தலதா மாளிகை ஒன்றினைக் கட்டி அதில் பிரதிஷ்டை செய்தமை. இவனால் ஆற்றப்பட்ட பணியாகும்.

**11. இப்பணியானது 3ம் விஜயபாகு மன்னனுக்கு எவ்வாறாக மக்களின் ஆதரவு கிடைக்கக் காரணமாகியது?**

இலங்கையின் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டு புனித தந்தத்தின் உரிமையாளராக இருக்க வேண்டும் என்ற நம்பிக்கை நிலவிய காலம் என்பதனால், இவனின் பணியானது மக்களின் ஆதரவை அவனுக்குக் கிடைக்கப் பெறச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மூன்றாம் விஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலம் யாது?

கி.பி 1232 - 1236

13. மூன்றாம் விஜயபாகுவிற்குப் பின் மன்னனாகியவன் யார்? அவனது ஆட்சிக்காலம் யாது?

- 2ம் பராக்கிரமபாகு மன்னன் (8ம் விஜயபாகுவின் மூத்த புதல்வன்) கி.பி 1236 - 1270

14. 2ம் பராக்கிரமபாகு இலங்கையை ஐக்கியப்படுத்துவதற்கு மேற்கொண்ட மூன்று போர்களையும் குறிப்பிடுக?

- 40 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த கலிங்க மாகனைக் கொன்று நாட்டை மீட்டமை.
- சந்திரபானுவின் முதலாவது ஆக்கிரமிப்பை வென்றமை.
- சந்திரபானுவின் இரண்டாவது ஆக்கிரமிப்பின் போது அவனைக் கொன்று வெற்றி பெற்றமை.

15. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் பணிகளைத் தருக?

- தனது தந்தையால் பாதுகாத்து வைக்கப் பட்டிருந்த புனித தந்தத்தை தம்ப தெனியாவிற்கு எடுத்து வந்து தலதா மாளிகையைக் கட்டுவித்தமை.
- தேவபதிராஜ என்ற அமைச்சர் மூலம் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொண்டமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிவனொளிபாத மலைக்குச் செல்லும் பாதைகளைச் சீர்திருத்தி அமைத்தமை.
- நந்தவனங்களை அமைத்தமை, பாலங்களை நிர்மாணித்தமை.
- பொருளியல் நடவடிக்கையாக தெங்குப் பயிர்ச்செய்கை மேற்கொண்டமை.

**16. இரண்டாம் பராக்கிரமபாகு மன்னன் சிறந்த அறிஞனாகத் திகழ்ந்தான் என்பதற்கான எடுத்துக்காட்டுக் களைத் தருக?**

- சிங்களம், பாளி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்திருந்தான்.
- "கவிசிலுமின" எனும் காவிய நூலை எழுதினான்.
- "கலிகால சாஹித்திய சர்வக்ஞ பண்டித" எனும் புகழ் நாமத்தைப் பெற்றிருந்தான்.

**17. தம்பதெனியாவை ஆட்சி செய்த மன்னர்களையும், ஆட்சிக்காலத்தையும் எழுதுக?**

- 3ம் விஜயபாகு - 1232 - 1236
- 2ம் பராக்கிரமபாகு - 1236 - 1270
- 4ம் விஜயபாகு - 1270 - 1272
- 1ம் புவனேகபாகு - 1272

**18. யாப்பகூவ இராச்சியம் உருவான முறையைக் குறிப்பிடுக?**

- 2ம் பராக்கிரமபாகு மரணத்தின் பின் (1270ம் ஆண்டு) அவனது மகன் நான்காம் விஜயபாகு மன்னன் ஆனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இரண்டு ஆண்டுகள் மாளிகையில் ஏற்பட்ட சதியினால் 4ம் விஜயபாகு கொலை செய்யப்பட்டான்.
- 4ம் விஜயபாகுவின் சகோதரன் முதலாம் புவனேகபாகு மன்னனானவுடன் பாதுகாப்பு கருதி யாப்பகூவாவைத் தலைநகர் ஆக்கினான்.

19. **யாப்பகூவ தலைநகராக்கப்பட்டமைக்குரிய காரணங்களைத் தருக?**
    - மலைகளாலும், குளங்களாலும் சூழப்பட்டு பாதுகாக்கப்பட்டிருந்தமை.
    - வடபகுதித் தலைவர்கள், வன்னித் தலைவர்களின் ஆக்கிரமிப்புக்கும் அச்சுறுத்தலுக்கும் பாதுகாப்பாக அமைந் திருந்தமை.
    - ஏற்கனவே சுப என்ற தளபதியால் பாதுகாப்பு கோட்டை அமைந்திருந்தமை.

20. **முதலாம் புவனேகபாகு மன்னனால் ஆற்றப்பட்ட பணிகளைக் குறிப்பிடுக?**
    - யப்பகுவாவில் தலதா மாளிகையைக் கட்டுவித்தமை.
    - பௌத்த நூல்களை எழுவித்தமை.
    - எகிப்துடன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டமை. வர்த்தக தூதுக்குழுவை அனுப்பி தம்மால் வழங்கக்கூடிய பொருட்கள் பட்டியல் ஒன்றையும் சமர்ப்பித்தான்.
    - ஆண்டுதோறும் உபசம்பதா விழாவினை நடத்தினான்.
    - யாப்பகூவாவில் அரசமாளிகையை அமைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. குருனாகலைத் தலை நகராக தெரிவு செய்த மன்னன் யார்?
இரண்டாம் புவனேகபாகு (முதலாம் புவனேகபாகுவின் மகன்)

22. இரண்டாம் புவனேகபாகுவிற்கு பின்னர் குருணாகலின் ஆட்சியை ஏற்றுக் கொண்ட மன்னன் யார்?
நான்காம் பராக்கிரமபாகு

23. குருணாகல் காலத்தில் இடம்பெற்ற பணிகளைத் தருக?

- பாளி மொழியில் எழுதப்பட்டிருந்த "பன்சிய பனஸ் ஜாதகய" எனும் நூல் சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டமை.
- தலதா சிரித,சிங்கள போதிவங்சய, அநாகதவங்ஸய போன்ற இலக்கியங்கள் எழுதப்பட்டமை.
- நான்காம் பராக்கிரமபாகு சிறந்த அறிஞனாகவும், இலக்கியங்களின் வளர்ச்சிக்கும் ஆதரவு அளித்தான்.
- 4ம் பராக்கிரமபாகு பண்டித பராக்கிரமபாகு என அழைக்கப்பட்டான்.

24. கம்பளை இராச்சியம் எம்மன்னனால் தோற்றுவிக்கப்பட்டது?
நான்காம் புவனேகபாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. நான்காம் புவனேகுவிற்குப் பின் 5ம் புவனேகபாகு மன்னனானன். அக்கால கட்டத்தில் இடம்பெற்ற முக்கியமான நடவடிக்கைகளைத் தருக?

- அரசருக்கு மேலதிகமாக நிஸங்க அழகேஸ்வர, சேனாலங்காதீகார எனும் அதிகாரம் மிக்க தலைவர்கள் இருவர் காணப்பட்டமை.
- நிஸங்க அழகேஸ்வர அமைச்சர் ஸ்ரீ ஜெயவர்த்தன புரவில் கோட்டை ஒன்றை நிறுவி ஆரியச்சக்கரவர்த்திகளின் படையை பின்வாங்கச் செய்தமை.
- இபன் பதுதா என்ற அரேபிய தேசசஞ்சரி இலங்கைக்கு வந்தமை.
- கம்பளை காலத்தின் இறுதிப்பகுதியில் சீனாவின் செங்ஹோ என்ற தளபதி இலங்கையை ஆக்கிரமித்தமை.
- கடலாதெனிய, லங்காதிலக, எம்பக்க தேவாலயம் என்பன கட்டப்பட்மை.

26. கம்பளயை அடுத்து கோட்டை இராச்சியம் தோற்றம் பெற்றது. இதனைத் தலைநகராக்கிய மன்னன் யார்?
6ம் பராக்கிரமபாகு

27. ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் தந்தை தாயின் பெயர்களைக் குறிப்பிடுக?

- தந்தை பெயர் - ஜயமஹலே
- தாய் பெயர் - சுனேத்ரா தேவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. கோட்டை தலைநகராக்கப்பட்டமைக்குரிய காரணங்களைத் தருக?

- நீர் அரண்கள் கொண்டதாக அமைந்துள்ளது.
- நிஸ்ஸங்க அழகக் கோனாரால் ஏற்கனவே வலிமையான கோட்டை அமைக்கப் பட்டிருந்தமை.
- வடபகுதி ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆக்கிரமிப்பினை எதிர்கொள்ள வேண்டி யிருந்தமை.

29. 6ம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் இடம்பெற்ற முக்கிய விடயங்களைக் குறிப்பிடுக?

- ஐக்கியப்பட்ட நாட்டில் அமைதியான ஆட்சியை ஏற்படுத்தியமை.
- நாட்டில் கல்வித்துறை எழுச்சி பெற்றமை.
- முக்கிய பிரிவெனாக்கள் உருவாக்கப் பட்டன.
  உ+ம் : பெப்பிலியானே சுனேத்ராதேவி பிரிவெனா, கேரகல பத்மாவதி பிரிவெனா
- கல்விமான்கள் தோற்றம் பெற்றமை.
  உ+ம் : வீதாகம மைத்திரி தேரர், தொட்ட கமுவே ஸ்ரீராகுல தேரர்
- சிறப்பான இலக்கிய ஆக்கங்கள் எழுதப்பட்டன.
  உ+ம் : செலலிஹினி சந்தேச, கிராசந் தேச, பெரகும்சிரித, காவியசேகர.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. யாழ்ப்பாண இராச்சியப் பிராந்திய அரசு எப்போது உருவானது?
பொலனறுவை இராச்சியம் வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து

31. யாழ்ப்பாண இராச்சிய வரலாற்றைக் கூறும் இலக்கிய மூலாதாரங்களைத் தருக?
- யாழ்ப்பாண வைபவ மாலை
- செகராச சேகர மாலை

32. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த போது யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னன் யார்?
பரராஜ சேகரன்

33. போர்த்துக்கேயருக்கும் எந்த யாழ்ப்பாண ஆட்சியாளருக்கு இடையில் தொடர்பு ஏற்பட்டது? போர்த்துக்கேயரிடம் யாழ்ப்பாணம் வசப்பட்ட ஆண்டு எது?
சங்கிலியன் 1619ம் ஆண்டு

34. அ) யாழ்ப்பாணத்தை வெற்றிகொள்ள 6ம் பராக்கிரமபாகு மன்னனால் அனுப்பப் பட்டவன் யார்?
ஆ) அவன் அமைத்த ஆலயத்தின் பெயர் யாது?
அ) சப்புமல் குமரன்
ஆ) நல்லூர் கந்தசுவாமி கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**35. பொலன்னறுவையின் வீழ்ச்சியின் பின்னர் இராசதானிகள் தென்மேற்கு நோக்கி இடம்பெயர்ந்த ஒழுங்கினை எழுதுக?**

- தம்பதெனியா - மூன்றாம் விஜயபாகு
- யாப்பகூவ - முதலாம் புவனேகபாகு
- குருணாகல் - இரண்டாம் புவனேகபாகு
- கம்பளை - நான்காம் புவனேகபாகு
- கோட்டை - ஆறாம் பராக்கிரமபாகு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அலகு 05*

# ஐரோப்பாவின் புராதன நாகரீகங்கள்

01. ஐரோப்பாவின் புராதன நாகரிகங்களைக் குறிப்பிடுக?
- கிரேக்க நாகரிகம்
- உரோம நாகரிகம்

## கிரேக்க நாகரிகம்

02. கிரேக்க நாகரிகத்தின் அமைவிடத்தை விளக்குக?

மேற்கில் அயோனியன் கடலுக்கும் கிழக்கில் ஈஜியன் கடலுக்கும் மத்திய தரைக் கடலுக்குமிடையே உள்ள குடாநாடும் அதற்குத் தெற்கிலுள்ள கிரீட் தீவு உட்பட ஏனைய தீவுக் கூட்டங்களையும் அடிப்படையாக கொண்டு கிரேக்க நாகரிகம் உருவானது.

03. கிரேக்க நாகரிகத்தின் அமைவிடச் சிறப்புக்களை எழுதுக?
- மிகப்பெரிய தீவான கிரீட் தீவை தெற்கே கொண்டிருப்பதுடன் ஏனைய பல தீவுக் கூட்டங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.
- மலைகள் நிரம்பிய நாடாகும். இங்குள்ள ஒலிம்பஸ் மலை மிகவும் புகழ் பெற்றதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மலைகளில் இருந்து பாய்ந்தோடும் நதிகளால் விவசாயத்திற்கு உகந்த சூழல் நிலவுவதுடன் சிறந்த காலநிலைகளும் உருவாகியுள்ளது.
- பல்லுருவக்கடற்கரை ஆனபடியால் இயற்கைத் துறைமுகங்கள் பலவும் காணப்படுகின்றமையால் வெளிநாட்டு உறவுகளுக்கும்,வர்த்தக நடவடிக்கைகளுக்கும் அது பேருதவியாக அமைந்தது.

04. கிரேக்க நாகரிகத்தின் ஆரம்பத்தை எடுத்து விளக்குக?

- கிரேக்க நாகரிகம் ஆரம்பமாவதற்கு முன்னர் கிரீட் தீவை அடிப்படையாகக் கொண்டு மினோவன் நாகரீகம் காணப்பட்டது.
- வேறு பிரதேசங்களிலிருந்தும் பல்வேறு கோத்திரங்களினதும் இனக்குழுக்களினதும் ஆக்கிரமிப்புக் காரணமாக மினோவன் நாகரீகம் வீழ்ச்சியடைந்தது.
- ''இந்தோ'' எனப்படும் ஐரோப்பிய இனக்குழுவே அவ்வாறு ஆக்கிரமித்தது. அக்குழுவினர் சிறு கிராமங்களை அமைத்து கி.மு 2000ம் ஆண்டளவில் கிரேக்க நாகரிகம் தோன்றியது.

05. நகர அரசுகள் எவ்வாறு தோற்றம் பெற்றன?

- பல்வேறு கோத்திரங்களினாலும் மக்கள் கூட்டத்தினராலும் உருவாக்கிக் கொள்ளப்பட்ட கிராமங்கள் அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்து நகரங்கள் தோன்றின. இவ்வாறான நகரங்களை அண்டி கி.மு. 700ஆம் ஆண்டளவில் நகர அரசுகள் பலவும் உருவாகின. கிரீஸில் நிலவிய இந்நகர அரசமுறையே நகர அரசமுறை எனப் பெயர் பெற்றது.

**06. கிரேக்கத்தில் தோன்றிய நகர அரசுகளில் முக்கியமானவற்றைத் தருக?**

எதென்ஸ், ஸ்பாட்டா

**07. கிரேக்கத்தில் தோன்றிய நகர அரசுகளின் பண்புகளை எழுதுக?**

- நிலப்பரப்பு சிறியதாயிருந்தமை.
- சனத்தொகை வரையறைக்குட்பட்டிருந்தது.
- பிரஜைகளுக்கு மாத்திரமே அரசியல் உரிமை இருந்தது.
- மக்கள் ஒரே இடத்தில் ஒன்று கூடி கலந்துரையாடி அரசியல் தீர்மானங்களை மேற்கொண்டனர்.

**08. கிரேக்கத்தில் நேரடி ஜனநாயகம் தோற்றம் பெற்ற விதத்தை விளக்குக?**

எதென்ஸ் மற்றும் ஸ்பாட்டா நகர அரசுகளின் மக்கள் ஒரே இடத்தில் ஒன்று கூடி கலந்துரையாடி அரசியல் தீர்மானங்களை மேற்கொண்டதிலிருந்து தோற்றம் பெற்றது.

**09. கிரேக்கத்தின் பொற்காலம் எனக் கருதப்பட்டது எம்மன்னனது காலத்திலாகும்?**

பெரிக்ளீஸ் மன்னரது காலத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பெரிக்ளீஸ் மன்னன் எதென்ஸ் நகர மத்தியில் உள்ள சிறிய குன்று ஒன்றில் உருவாக்கிய தலைநகரத்தின் பெயர் என்ன?

அக்ரோபொலிஸ்

11. மசிடோனியாவின் பிலிப் மன்னன் கிரேக்கத்தை ஆக்கிரமிக்கும் சந்தர்ப்பம் எவ்வாறு ஏற்பட்டது?

கிரேக்க நகர அரசுகள் ஒன்றை ஒன்று முந்திச் செல்வதற்கு முயற்சிகளை மேற்கண்ட குழப்பநிலையே அச்சந்தர்ப்பத்தை உருவாக்கியது.

12. பிலிப் மன்னனின் மரணத்தின் பின் மன்னன் ஆனவர் யார்?

பிலிப் மன்னனின் மகன் அலெக்சாண்டர்.

13. புராதன கிரேக்க மக்களின் பொருளாதார வாழக்கை முறை எவற்றை அடிப்படை யாகக் கொண்டிருந்தது?

விவசாயம், மந்தைவளர்ப்பு, வர்த்தகம்.

14. கிரேக்கத்தில் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களையும், பழங்களையும் தருக?

தானியங்கள் : கோதுமை, பார்லி

பழங்கள் : ஒலிவ், திராட்சை

15. கிரேக்கத்தில் மந்தை வளர்ப்பில் அடங்கும் விலங்குகளைத் தருக?

மாடு, ஆடு, செம்மறியாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. **கிரேக்க வர்த்தக உறவினைக் கொண்டிருந்த நாடுகள் எவை?**
இந்தியா, சீனா, இலங்கை.'

17. **கிரேக்கர் இலங்கையை எப்பெயர் கொண்டு அழைத்தனர்?**
தப்ரபேன்.

18. **கிரேக்கரின் வர்த்தகப்பொருள்களில் குறிப்பிடத்தக்கன எவையென எழுதுக?**
- அலங்கார மட்பாண்டங்கள்
- லினன் துணி வகைகள்
- வென்பானம் (திராட்சை ரசம்)

19. **புராதன கிரேக்கரின் சமூக அமைப்பைத் தருக?**
- பிரபுக்கள்
- சாதாரண குடிமக்கள்
- அடிமைகள்

20. **கிரேக்க மக்களின் வாழ்க்கை முறை பற்றி விளக்குக?**
- குடும்பம் சிறிய அலகாகக் காணப்பட்டது.
- எளிமையான வாழ்க்கை முறைக்குப் பழக்கப்பட்டிருந்தனர்.
- கிரேக்கரின் உடலமைப்பு பொதுவாக ஒத்த தன்மையாகவிருந்தது.
- பிரபுக்கள் மாடி வீடுகளில் வாழ்ந்தனர்.
- சாதாரணமக்கள் எளிமையான வீடுகளில் வாழ்ந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உணவாக மரக்கறி, இறைச்சி, மீன், பன்றி என்பனவும் , பானமாக வைனும் காணப்பட்டன.
- நடுமுற்றத்தை சூழ படுக்கை அறைகள், சமையலறை, களஞ்சிய அறை என்பன கட்டப்பட்டிருந்தன.

**21. கிரேக்கரின் கட்டடக் கலைபற்றிய குறிப்புக்களைத் தருக?**

- பெரிய கட்டிடங்களையும், மிகவும் அழகான தேவாலயங்களையும் அமைப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தனர். (உ+ம் : பாதீனன் தேவாலயம், டயோனியன் நாடக அரங்கு)
- தேவாலயங்களைக் கட்டும் போது செப்பனிடப் பட்ட சுண்ணாம்புக்கல், வெண்பளிங்குக்கல்; வர்ண செங்கற்கள் என்பவற்றைப் பயன்படுத்தினர்.

**22. ''கிரேக்கர் சிற்பங்கள், சிலைகள் என்பவற்றை வடிவமைப்பதில் திறமை பெற்றிருந்தனர்'' விளக்குக**

- மனித சரீர அமைப்புகளின் இயற்கைத் தன்மை புலனாகும் விதமாக சிலைகளை வடிவமைத்தனர்.
- பரிதி வட்டம் வீசும் விளையாட்டு வீரரின் சிலை இதற்கு எடுத்துக்காட்டாகும்.
- சிலைகளை நிர்மாணிக்கும் போது யானைத்தந்தம், தங்கம் போன்றவற்றை பயன்படுத்தினர் (உ+ம் : அதீனா தேவதையின் சிலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**23. கிரேக்க இலக்கியங்களின் முக்கிய அம்சங்களைத் தருக?**

- இலக்கியங்கள் கிரேக்க மொழியில் எழுதப்பட்டன.
- வரலாற்றுக் கவிதைகள், வீர காவியங்கள் எனப் படைக்கப்பட்டன.
  உ+ம் : ஹோமரின் இலியட், ஒடிஸி

**24. கிரேக்கர்களால் எவ்வாறான நாடகங்கள் எழுதப்பட்டன?**

- இன்பியல், துன்பியல் எனும் இருவகை நாடகங்கள்.

**25. கிரேக்கத்தின் பிரபல்யமான நாடகக் கலைஞர்களின் பெயர்களைத் தருக?**

- ஈசிகிளஸ்
- செபொக்லீஸ்
- யூரிபீடிஸ்

**26. கிரேக்கத்தில் காணப்பட்ட உன்னதமான கல்வி நிலையங்களைத் தருக?**

- பிளேட்டோவின் அக்கடமி
- அரிஸ்டோட்டலின் லைசியம்

**27. கிரேக்கத்தில் சிறந்த இலக்கிய கர்த்தாக்களின் பெயர்களைத் தருக?**

- ஹெரடோரஸ்
- தியுசீடிஸ்
- அரிஸ்டோட்டல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. கிரேக்கத்தின் தத்துவஞானிகள் மூவரைக் குறிப்பிடுக?
- சோக்கிரட்டீஸ்
- பிளேட்டோ
- அரிஸ்டோட்டல்

29. மேற்கு வைத்தியத்துறை தந்தை யார்?
ஹிப்போகிரடிஸ்

30. கணித விஞ்ஞானத்துறையில் மகத்துவம் பெற்ற அறிஞர் யார்?
ஆக்கிமீடிஸ்

31. கிரேக்க நாகரிக மக்களின் சமய நிலையை எழுதுக?
- புனித யாத்திரை மேற்கொள்ளல் பெருமளவுக்கு காணக்கூடியதாக இருந்தது.
- ஒவ்வொரு அரசுக்கும் வெவ்வேறான தெய்வங்கள் காணப்பட்டன.
- சியுஸ் கிரேக்க தெய்வங்களுள் முதன்மை யானவராகக் காணப்படுகிறார்.
- சியுஸின் மகளான அதீனா கிரேக்கரின் வணக்கத்துக்குரிய பிரதான தெய்வமாகும். பாதீனிய தேவாலயம் அத்தெய்வத்திற்கே கட்டப்பட்டதாகும்.
- ஒலிம்பஸ்மலையின சிகரத்தை தெய்வத்தின் உறவிடமாகக் கருதினர்.

32. கிரேக்க நாகரிக மக்களின் விளையாட்டு சம்பந்தமான தகவல்களைத் தருக?
- ஓட்டம், குத்துச்சண்டை, பளுதூக்குதல், பரிதிவட்டம் வீசுதல் போன்ற விளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாட்டுக்களில் முக்கியமானவையாகக் கருதப்பட்டன.

- இன்றைய ஒலிம்பிக் விளையாட்டின் ஆரம்பம் கிரேக்கர்களிடமிருந்தே தொடங்கியது.
- ஆதி காலத்தில் சியுஸ் தெய்வத்தை நினைவு கூரும் முகமாக மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் அரசுகளின் எல்லாக் குடிமக்களும் பங்கு பற்றினர்.
- ஒலிம்பிக் விளையாட்டு கிரேக்கர்களின் ஒற்றுமையை வெளிக்காட்டும் ஒரு சந்தர்ப்பமாகக் கொண்டனர்.

33. கிரேக்க நாகரிகத்தால் உலகுக்கு கிடைக்கப்பெற்ற அருஞ் செல்வங்களைத் தருக?

- நவீன ஐரோப்பாவைக் கட்டியெழுப்பு வதற்கான ஆரம்ப அடித்தளம் கிரேக்க நாகரிகத்தாலேயே இடப்பட்டது.
- ஐரோப்பாவின் அரசியல், இலக்கியம் விஞ்ஞானம், கலைகள் உருவாவதற்கு கிரேக்க நாகரீகம் பெரும்பங்களிப்பை வழங்கியுள்ளது.
- கிரேக்க தத்துவ ஞானிகளினதும், சிந்தனை யாளர்களினதும் போதனைகள் நவீன ஐரோப்பியச் சிந்தனைகளுக்கு வழிகாட்டியது.
- நவீன ஜனநாயக ஆட்சி முறையை உலகிற்கு தந்துதவியவர்கள் கிரேக்கர்கள் ஆவார்கள்.
- ஒலிம்பிக் விளையாட்டு கிரேக்கர்களிட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிருந்து இன்றைய நவீன உலகம் பெற்றுக்கொண்ட கொடையாகும்.

## உரோம நாகரிகம்

34. உரோம நாகரிகத்தின் அமைவிடம் பற்றிக் குறிப்பிடுக?

- இத்தாலியின் உரோம நகரத்தை மையமாக கொண்டு இந்நாகரிகம் தோன்றியது.
- இத்தாலியானது மத்தியதரைக்கடலை நோக்கி நீண்டுள்ள குடாநாடு ஆகும்.
- இதன் எல்லைகள்

  கிழக்கில் - அட்றியாற்றிக்கடல்
  தெற்கில் - அயோனியன் கடல்
  மேற்கில் - மத்தியதரைக்கடல்
  வடக்கில் - அலப்ஸ் மலையால் ஐரோப்பாவிலிருந்து இந்நாடு பிரிக்கப்பட்டுள்ளது.

35. உரோம நகர வளர்ச்சிக்கு துணைபுரிந்த காரணி யாது?

- இத்தாலியின் மத்தியினூடாக வடக்கில் இருந்து தெற்காக அப்பிளைன் மலை நீண்டு செல்கின்றது.
- இம்மலையில் ஊற்றெடுக்கும் தைபர் நதியின் ஊடாக உரோம நகரம் வரை கப்பல் பயனம் செய்யக் கூடியதாக வுள்ளமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**36. உரோம நாகரிகம் எவ்வாறு தோற்றம் பெற்றது என எழுதுக?**

- ஐரோப்பாவிலிருந்து இத்தாலிக்கு வந்த இலத்தீனியர்கள் உரோமை உருவாக்கினர் என்பது ஒரு கருத்தாக உள்ளது.
- ரொமியுலஸ் எனும் வீரன் ஒருவன் உரோம நகரை கட்டியெழுப்பினான் என்ற வாய்மொழிக் கதை ஒன்றும் நிலவுகிறது.
- உரோம் ஆதிகாலத்திலிருந்தே சிறந்த வணிக நிலையமாக இருந்தமையால் ஏனைய பிரதேசங்களிலிருந்து வந்த வணிகர்கள் இந்நாகரிகத்தினை கட்டியெழுப்பினர் என்பதும் பொதுவாக ஏற்றுக்கொள்ள கூடியதொன்றாக உள்ளது.

**37. ரொமியுலஸ் உரோம் நகரத்தை உருவாக்கியமை பற்றிய வாய்மொழிக் கதை பற்றி எழுதுக?**

- அரச குடும்பத்தில் ஏற்பட்ட சதியினால் அரசுரிமையாளரான ரொமியுலஸ், ரீமஸ் எனும் இரட்டைச் சிசுக்களை நீரில் மூழ்கடித்துக் கொல்ல ஆணை பிறப்பிக்கப்பட்டது.
- பணிக்கப்பட்ட சேவகன் இக்குழந்தைகள் மீது ஏற்பட்ட அனுதாபத்தால் தடிகளிலான தொட்டில் ஒன்றில் மிதக்கவிட்டான்.
- ஓநாய் ஒன்று இவற்றைக் கண்டெடுத்து வளர்த்து வந்தது, பின்னர் இடையர் ஒருவரால் பிள்ளைகள் போல் வளர்க்கப்பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாலிபப் பராயத்தை அடைந்த இவர்கள் தனது ஆட்சி பீடத்தை உருவாக்கக் கருதி ஒவ்வொரு நகரத்தை உருவாக்கினர்.
- அவ்வாறு உருவாக்கப்பட்ட நகர்களில் ரொமியுலசால் உருவாக்கப்பட்ட நகரே உரோம் எனப் பெயர் சூட்டப்பட்டது.

**38. உரோமில் ஆரம்ப கால ஆட்சிமுறை எவ்வாறு காணப்பட்டது?**

- ஆரம்பத்தில் கோத்திரத்தையோ குடும்பத்தையே அடிப்படையாகக் கொண்ட ஆட்சி முறை.
- காலப்போக்கில் முடியாட்சிமுறை உருவானது.
- பின்னர் முடியாட்சிமுறை அழிவுற்று கி.மு 509ல் சமூக ஆட்சி முறை உருவானது.

**39. அ) சமூக ஆட்சி முறையில் அதிகாரமளிக்கப்பட்டவருக்கு வழங்கப்பட்ட பெயர் யாது?**

**ஆ) ஆட்சி நடவடிக்கைகளுக்கு உதவியாக இருந்த சபை எது?**

அ) கொன்சல் எனப்பட்ட அதிகாரிகள் இருவரிடம்.

ஆ) செனட்சபை

**40. உரோம பேரரசு உருவாகிய முறையினைத் தருக?**

- உரோம் கட்டியெழுப்பப்பட்ட போது அதனைச் சூழ்ந்த பிரதேசங்களே உரிமையாக இருந்தன.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- கி.மு. 270ல் முழு இத்தாலிய தீபகற்பமும் உரோம ஆட்சிக்குட்பட்டது.
- கி.மு. 107ல் உரோமப் பேரரசு உருவானது.
- பின்னர் ஸ்பானியா, இங்கிலாந்து, பிரான்ஸ், மத்திய தரைக்கடலைச் சூழவுள்ள பிரதேசங்களையும் தம்முடன் இணைத்துக் கொண்டனர்.

**41. புகழ்பெற்ற உரோமப் பேரரசர்களின் பெயர்களைத் தருக?**

- ஜுலியஸ் சீசர்
- ஒகஸ்டஸ் சீசர்
- நீரோ மன்னன்
- கெரகல்லா
- மகாகொன்ஸ்தாந்தைன்

**42. ஜுலியசீசர் பற்றிக் குறிப்பிடுக?**

- கி.மு 59-44 காலத்தில் ஆட்சிபுரிந்த கீர்த்தி மிக்க மன்னராவர்.
- இவர் போர் நடவடிக்கையில் திறமையுள்ள போர் வீரராவர்.
- ஆரம்பத்தில் உரோமப் பேரரசைக் கட்டியெழுப்பியமை இவரேயாகும்.
- இவர் நேர்மையான ஆட்சியாளராகத் திகழ்ந்தார்.

**43. ஒகஸ்ட் சீசர் பற்றிய தகவல்களைத் தருக?**

- இவரின் ஆட்சிக்காலம் உரோமானிய வரலாற்றின் பொற்காலமாகும்.
- உரோமின் புராதன கட்டிடமான கொலோசியம், கெரகல்லா பெருங்குளியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடாகம் என்பன இம்மன்னன் காலத்திலேயே அமைக்கப்பட்டது.

- இவரின் ஆட்சிக்குட்பட்ட பெத்லேகம் என்ற இடத்திலேயே இயேசுநாதர் அவதரித்தார்

44. உரோமனியர் வாழ்க்கை முறை எவ்வாறாக இருந்தது?

- உரோமனியர்களிடையே குடும்பமே சமூகத்தின் முக்கிய அலகாகக் கருதப்பட்டது.
- குடும்பத் தலைவராக தந்தை விளங்கினார். அவரே குடும்பத்தின் சகல விடயங்களையும் மேற்கொண்டார்.
- பெண்களுக்கு உயர் அந்தஸ்து வழங்கப்பட்டிருந்தது. உயர் பதவிகளையும் வகித்தனர்.
- பெண்கள் வைத்தியர்களாகவும் திகழ்ந்தனர்.
- தாயை மரியாதைக்குரிய தெய்வீகமானவளாகக் கருதினர்.

45. உரோம சமூகத்தில் காணப்பட்ட மூன்று பிரிவினரையும் குறிப்பிடுக?

- பிரபுக்கள் ♦ குடிமக்கள் ♦ அடிமைகள்

46. உரோமர்களின் நகர நிர்மாணம், வீடமைப்பு பற்றிக் குறிப்பிடுக?

<u>நகர் நிர்மாணம்</u>

- திட்டமிட்ட முறையில் நகர்களை நிர்மாணித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒவ்வொரு நகரமும் வீதித்தொகுதியால் இணைக்கப்பட்டிருந்தது.
- பாலம் கட்டும் கலையில் விசேடத்துவம் பெற்றிருந்தனர்.

**வீடமைப்பு**

- பிரபுக்கள் நகரங்களில் மாடிவீடுகளை அமைத்தனர்.
- நீர் வசதி, சுகாதார வழிமுறைகள் முறைப்படி திட்டமிட்டு வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன.

**47. உரோமரின் இலக்கியக் கலை பற்றி எழுதுக?**

- உரோமனியர்கள் சிறந்த இலக்கியவாதி களாகத் திகழ்ந்தனர்.
- உயர்தரத்திலான கவிதை, உரை நடை நூல்கள் பலவற்றை படைத்துள்ளனர்.

  உ+ம் : வர்ஜில் எனும் நூலாசிரியர் எழுதிய ஈனிட்.
- உரோமபுரியில் கட்டப்பட்டிருந்த நாடக அரங்குகள், திறந்தவெளி நாடக அரங்குகள் என்பன அம்மக்களின் கலை இரசிகத் தன்மையை எடுத்துக் காட்டும் உதாரணங் களாகும்.

**48. உரோமர்களின் செதுக்கல் கலைத் திறனுக்கு உதாரணம் தருக?**

- நீரோ மன்னனினது செம்பிலான சிலை
- ஓகஸ்ட சீசரின் பேரரசன் சிலை
- டிரஜன் இளவரசன் சிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. உரோமனியக் கட்டிட நிர்மாணச் சிறப்பினை எடுத்துக்காட்டும் படைப்புக் களை தருக?
- ♦ கொலோசியம் ♦ பாந்தியன் ஆலயம்

50. ''உரோமனிய கட்டிட நிர்மாணச் சிறப்பினை கொலோசியம் எடுத்துக் காட்டுகிறது'' அதனை விளக்குக?
- ♦ கொலோசியம் திறந்த வெளி விளை யாட்டரங்காக காணப்படுகிறது.
- ♦ 50000 பேர் ஏக காலத்தில் ஒன்று கூட முடியும்.
- ♦ உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும்.

51. பாந்தியன் ஆலயச்சிறப்பினை குறிப்பிடுக?
- ♦ உரோமனியக் கட்டிடக் கலையின் உன்னதத்தைக் காட்டும் பிரமாண்டமான நிர்மாணமாகும்.
- ♦ உரோமரால் வணங்கப்பட்ட அனைத்து தெய்வங்களுக்காகவும் அமைக்கப்பட்டுள்ளது.

52. உரோமரின் விளையாட்டுக் கலைபற்றிய விபரங்களைத் தருக?
- ♦ வண்டி ஓட்டப் போட்டிகளை நடத்துவதிலும், பங்குகொள்வதிலும் ஆர்வம் காட்டினர்.
- ♦ சிங்கம் போன்ற மிருகங்களைப் பயன்படுத்தி கொடூரமான சண்டைகள் இடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினர்.
- ♦ அடிமைகளைப் பயன்படுத்தி நடாத்தப்பட்ட இவ்வாறான போட்டிகளில் நூற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கான மனிதர்களும், மிருகங்களும் இறந்து போயின.

**53. உரோமபுரியின் வர்த்தக நடவடிக்கை களின் சிறப்பு யாது?**

- கீழைத்தேய, மேலைத்தேய வர்த்தகத்தில் உரோம் மத்திய நிலையமாய் விளங்கி யுள்ளது.
- இந்தியா, சீனா, இலங்கை ஆசிய நாடுகளுடனும் மத்தியதரைக் கடலைச் சூழ்ந்தநாடுகள் என்பனவற்றுடனும் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளது.
- பாதிகாபய மன்னன் ரூவான் வெலிசாயவை அழகுபடுத்துவதற்கு உரோமபுரியிலிருந்து பவளங்களை வரவழைத்ததாக மூலா தாரங்கள் கூறுவதிலிருந்து. உரோமின் இலங்கை தொடர்பிலான வர்த்தக தொடர்பினை அறியமுடிகின்றது.

**54. உரோமர்களது வழிபாட்டில் முக்கிய இடம் பிடித்துக் கொண்ட தெய்வங்கள் யாவை?**

- ஜுபிட்டர் - வளத்தின் அதிபதி
- மினர்வா - கைத்தொழிலுக்கு அதிபதி
- மார்ஸ் - யுத்தத்தின் அதிபதி
- செரேஸ் - நல்ல விளைச்சலுக்கு அதிபதி
- வீனஸ் - காதலுக்கு அதிபதி
- நெப்டியூன் - கடலுக்கு அதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. உரோமானிய நாகரிகத்தால் உலகிற்கு கிடைத்த பாரம்பரியங்களைத் தருக?

- ஐரோப்பிய நாகரிகத்திற்கு பாலம் கட்டுதல், நீர்க்குழாய்களை அமைத்தல், பெருந் தெருக்களை அமைத்தல் போன்ற தொழினுட்பம் கிடைத்துள்ளது.
- கிறிஸ்தவ சமயம், உரோமப் பேரரசில் பரவிய பின்னரே உலகம் முழுவதற்கும் பரந்து பட்டுச் சென்றமை.
- உரோமானியச் சட்டங்கள்
- இலத்தீன் மொழி
- உரோமானிய கட்டட நிர்மாணக்கலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அலகு 01*

# கணிப்பீட்டுப் பயிற்சி

01. **பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1. சேனைப்பயிர்ச் செய்கையின் பொருட்டு அறவிடப்பட்ட வரிகளுள் ஒன்று.
   1) நிகம் 2) கெதி அட
   3) மெதஹறஸ 4) பஸ்கோரச

2. பல வயல்களைக் கொண்ட பரந்த இடம் அழைக்கப்படும் முறை.
   1) கெத 2) பெல
   3) யால 4) சேன்

3. விவசாய நிலங்களில் ஈக்களைக் கட்டுப்படுத்த திரிகளை பின்வரும் எவ்வெண்ணெயில் ஊற வைத்து எரித்தனர்.
   1) இலுப்பெண்ணெய்
   2) தேங்காய் எண்ணெய்
   3) ஆமணக் கெண்ணெய்
   4) நல்லெண்ணெய்

4. சேனைப்பயிர்ச்செய்கை "உம்பக்க ஜாதக" நூலில் எவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.
   1) சேன் 2) பிட்டபிம்
   3) சாலி 4) நவதொளி சேன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. புராதன காலத்தில் இரத்தினக்கல் பட்டை தீட்டுவோரை எவ்வாறு அழைத்தனர்.
   1) மணிகர 2) பெஹெறகார
   3) கம்மாளர் 4) சுவர்ணகார

6. ருவான் வெலிசாயவை அலங்கரிப்பதற்காக பாதிகாபய மன்னன் பவளங்களைப் பெற்றுக்கொண்ட நாடு.
   1) கிரேக்கம் 2) சீனா
   3) அரேபியா 4) உரோம்

7. காலத்தால் முந்தைய ஹஸ் எப கஹபண நாணயத்தில் குறிக்கப்பட்ட வகையில் பின்வருவனவற்றுள் பொருத்தமானது எது.
   1) சூரியன், சந்திரன், பாம்பு
   2) மரம், புலி, சிங்கம்
   3) மரம், யானை, சூரியன்
   4) எருது, சூரியன், யானை

8. அனுமதி பெறாத தராசு, படிகள் என்பவற்றை பயன்படுத்தக்கூடாது எனக் குறிப்பிடும் கல்வெட்டு.
   1) பதுளை தூண் கல்வெட்டு
   2) மிகிந்தலை கல்வெட்டு
   3) கல்பொத்த கல்வெட்டு
   4) களுதிய பொக்குண கல்வெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. 2000 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் பயன்பாட்டில் இருந்த நாணயம்.
   1) சுவாஸ்திகா   2) கம்பமஸ்ஸ
   3) கஹபண   4) நிகம்

10. பண்டுகாபயன் தனது இளமைப் பராயத்தில் வாழ்ந்த கோபாலர்களின் கிராமம் எது?
   1) கோபாலகம்   2) தொரமடலாவ
   3) பண்டுவஸ்நுவர 4) ரிட்டி கல

02. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் குறிப்பிடுக.

1. கல்வெட்டுக்களில் சேனைப்பயிர்ச் செய்கை பிட்டபிம் என அழைக்கப்பட்டது. ( )

2. நெல்லை அவித்து உலர்த்தி குற்றிய அரிசி புழுங்கல் அரிசி எனப்படும். ( )

3. ஒரு பொருளைக் கொடுத்து இன்னொரு பொருளைப் பரிமாறிக் கொள்வது அத்தம் முறை எனப்படும். ( )

4. சேற்றுநிலப் பயிர்ச்செய்கை நெற்பயிர்ச் செய்கை எனவும் அழைக்கப்பட்டது. ( )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சமையற் கலையில் சிறப்புப் பெற்ற பெண்கள் மூலாதாரங்களில் மதுபாச்சிகா என அழைக்கப்பட்டனர் ( )

03. கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லினை எழுதி இடைவெளியைப் பூர்த்தி செய்க.

1. தனது தாய்க்கு பணிவிடை செய்த மன்னன் ....................... ஆவான்.

2. செம்புக் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற கைவினைஞர்கள் ....................... என அழைக்கப்பட்டனர்.

3. ....................... எனப்படுவது மாடுகளில் பொதிகளை ஏற்றிச் செல்லும் முறையாகும்.

4. அசோகமாலா சுவையான உணவு சமைத்ததாக கூறும் இலக்கிய மூலாதாரம் ....................... ஆகும்.

5. ....................... மன்னன் விவசாயி ஆக வேடம் பூண்டு வயலில் அறுவடைக்கு சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பின்வருவனவற்றை இணைக்கும் போது சரியான விடைக்குரிய ஆங்கில எழுத்துக் களை அடைப்புக்குள் எழுதுக.

1. ஹெலிகடா ( ) A. உட்பட்டிக்குவியல்
2. கம்லத்தன் ( ) B. பெரும்போகம்
3. தேவநம்பிய தீசன் ( ) C. வெருளி
4. வேளாண்மைக் குதிர் ( ) D. பெளத்தமதம் அறிமுகம்
5. அகலஹஸ ( ) E. அநுராதபுர கிராம நிர்வாகி

## விடைகள்

01. 1. [2] 2. [1] 3. [1] 4. [1]
5. [1] 6. [4] 7. [3] 8. [1]
9. [3] 10. [2]

02. 1. (✓) 2. (✓) 3. (×) 4. (✓)
5. (×)

03. 1. 8ம் அக்கபோதி
2. தம்பகர
3. தவளம்
4. சத்தர்மலங்கார
5. மகாசூலிமகாதிஸ்ஸ

04. 1. -C 2. -E 3. -D 4. -A
5. -B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அலகு 02

## கணிப்பீட்டுப் பயிற்சி

1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக

1. மானவம்ச மன்னர்கள் என்ற தொகுதியினுள் அடக்கமுடியாதவர்.
   1) 5ம் அக்கபோதி 2) 3ம் காசியப்பன்
   3) 4ம் மகிந்தன் 4) வசபன்

2. மகாவிஜயபாகு மன்னனது ஆட்சிகாலமாக அமைவது.
   1) கி.பி 1055 - கி.பி 1110
   2) கி.பி 833 - கி.பி 853
   3) கி.பி 1153 - கி.பி 1186
   4) கி.பி 1187 - கி.பி 1196

3. மிகிந்தலையில் வைத்தியசாலையை அமைத்த மன்னன்
   1) 4ம் காசியப்பன் 2) 2ம் சேனன்
   3) மானவர்மன் 4) சத்தாதீசன்

4. பொலனறுவையைக் "காலிங்கபுரம்" என அறிமுகப்படுத்திய மன்னன் யார் ?
   1) 1ம் விஜயபாகு
   2) இராஜேந்திர சோழன்
   3) நிஸங்கமல்லன்
   4) மகாபராக்கிரமபாகு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எம்மன்னனது காலத்தில் பஞ்ஷிகா புத்தகம் விகாரைகளினால் பேணப்பட்டது?
   1) 4ம் மகிந்தன் 2) 1ம் உதயன்
   3) 5ம் காசியப்பன் 4) உபதிஸ்ஸ மன்னன்

6. அநுராதபுர இராசதானி வீழ்ச்சியடைந்த காலப்பகுதி
   1) கி.பி 1412 2) கி.பி 1215
   3) கி.பி 1017 4) கி.பி 1070

7. மகாபராக்கிரமபாகு எந்நதிக்குக் குறுக்காக அணைகட்டி நதி நீரைத் திசை திருப்பினான்.
   1) மகாவலிகங்கை 2) யான்ஓயா
   3) கோணநதி 4) தெதுறு ஓயா

8. பர்மாவின் ஆக்கிரமிப்பில் வெற்றி கண்ட சேனாதிபதியென தெவனகல கல்வெட்டு யாரைக் குறிப்பிடுகிறது?
   1) லங்காபுர 2) நகரகிரி கீர்த்தி
   3) ஜகத் விஜய 4) சப்புமல்குமார

9. நிஸங்க மல்ல மன்னனது தந்தை பெயர்
   1) ஸ்ரீ ஜயகோபன்
   2) மாணபரணன்
   3) கீர்த்தி ஸ்ரீமேவன்
   4) மஹாசாமி மொஹலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. மானவர்மன் இலங்கையில் ஆட்சியைக் கைப்பற்ற உதவிய பல்லவவேந்தன்
   1) நரசிம்மவர்மன்
   2) மகாபலி
   3) 2ம் நரசிம்மவர்மன்
   4) மகேந்திரபல்லவன்

**02. கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லினை எழுதி இடைவெளியைப் பூர்த்தி செய்க.**

1. 1ம் விஜயபாகு சோழர்களை தோற்கடிக்க ........................ என்ற இடத்தில் படைகளைத் தயார் செய்தான்.

2. 2ம் சேனன் பாண்டிய நாட்டில் பெற்ற வெற்றி குறித்து கூறும் அநுராதபுர கல்வெட்டு ........................ ஆகும்.

3. மானவர்மன் பல்லவமன்னன் உதவியுடன் ........................ மன்னனைத் தோற்கடித்தான்.

4. அரச கொடுப்பனவுகள் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு ........................ ஆகும்.

5. மானவர்ம அரசவம்சம் அநுராதபுர காலத்தின் இறுதிவரை ........................ ஆண்டுகள் வரை நிலவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் குறிப்பிடுக.

1. 1ம் பராக்கிரமபாகு சுகலாதேவியை தோற்கடித்து உருகுணையை வெற்றி கொண்டு கி.பி 1160ல் இலங்கையை ஐக்கியப்படுத்தினான். ( )

2. புத்ததாச மன்னன் 10 கிராமங்களுக்கு ஒரு வைத்தியன் என்ற ரீதியில் நியமித்து மருத்துவம் செய்வித்தான் ( )

3. பொலனறுவை கத்திகாவத (ஒழுக்கக் கோவை) நிறுவுவதில் முன்னின்று செயற்பட்டவன் மகாவிஜயபாகு மன்னன் ஆவான். ( )

4. விஜயபாகுவின் மூன்றாவது படைப்பிரிவு மகியங்கனையில் இருந்து பொலனறுவையைத் தாக்கியது. ( )

5. பாண்டி விஜயக் குளம் என்பது நிஸ்ஸங்க மன்னனால் அமைக்கப்பட்ட குளமாகும். ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பின்வருவனவற்றை இணைக்கும் போது சரியான விடைக்குரிய ஆங்கில எழுத்துக் களை அடைப்புக்குள் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. பராக்கிரம பாண்டியன் | ( ) | A. | துலாபாரக்கொடை |
| 2. 1ம் விஜயபாகு | ( ) | B. | சங்கமுவ விகாரைக் கல்வெட்டு |
| 3. நிஸங்க மல்லன் | ( ) | C. | 1ம் மானபரண |
| 4. மகாபராக்கிரமபாகு | ( ) | D. | பொலனறுவையின் இறுதி மன்னன் |
| 5. தக்கிண தேசம | ( ) | E. | பணாகடுவ செப்பு சாசனம் |

## விடைகள்

01. 1. [4] 2. [1] 3. [2] 4. [3]
5. [1] 6. [3] 7. [4] 8. [2]
9. [1] 10. [3]

02. 1. மகா நாககுல
2. இரி பின்னாவ கல்வெட்டு
3. ஹத்தாட
4. அத்தானிதூாண் கல்வெட்டு
5. 300

03. 1. (✓) 2. (✓) 3. (×) 4. (✓)
5. (✓)

04. 1. -D 2. -E 3. -A 4. -B
5. -C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 03

# கணிப்பீட்டுப் பயிற்சி

01. பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

1. தொட்டுணரக் கூடிய மரபுரிமையாகக் கொள்ளக் கூடியது.
   1) வம்சக்கதைகள்
   2) கர்ணபரம்பரைக் கதைகள்
   3) சம்பிரதாயங்கள்
   4) சிகிரிய ஓவியங்கள்

2. உலக பாரம்பரிய சொத்துக்களை அடையாளப்படுத்தும் ஐக்கியநாடுகளின் அமைப்பு.
   1) UNICER 2) UNESCO
   3) UNHCR 4) UNA

3. கலிங்கப்பாணியில் தூண்கள் அமைக்கப் பட்டு சிற்பங்களுடன் கூடிய கட்டிடம்
   1) நிஸங்கலதா மண்டபம்
   2) எம்பக்க தேவாலயம்
   3) ரஜமகாவிகாரை
   4) லங்காதிலக விகாரை

4. அநுராதபுர நகரில் காணப்படும் கட்டிடம்
   1) கல்விகாரை 2) கிரிவிகாரை
   3) ஜேத்தவனராம 4) லங்காதிலக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. 1988ம் ஆண்டு உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்ட இடம்.
   1) சிகிரியக் கோட்டை
   2) தம்புள்ள ரஜமகாவிகாரை
   3) காலிக்கோட்டை
   4) பொலனறுவை நகரம்

6. ஆடல் பாடல்களுடன் 1ம் பராக்கிரமபாகு விழாக்களை நடாத்தியதாக கூறும் நூல் எது?
   1) சூளவம்சம் 2) தீபவம்சம்
   3) தாதுவம்சம் 4) மகாவம்சம்

7. பெரிய வெள்ளியை மதவிழாவாகக் கொண்டாடுபவர்கள்
   1) இஸ்லாமியர்கள் 2) கிறிஸ்தவர்கள்
   3) பௌத்தர்கள் 4) இந்துக்கள்

8. எட்டாவது உலக அதிசயமாக கொள்ளக் கூடிய கலாசார மரபுரிமை
   1) தாஜ்மகால்
   2) சீனப்பெருஞ்சுவர்
   3) பைசா கோபுரம்
   4) சிகிரியா

9. போர்த்துக்கேயர் இலங்கையில் முதலாவதாக வந்திறங்கிய இடம்.
   1) கோகண்ண 2) காலி
   3) மகாதித்த 4) மகாகம


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

10. அரக்கு சித்திரக்கலையில் பிரதேசச் சிறப்புப் பெற்ற இடம்
    1) தாழ்நில ஈரவலயப்பகுதி
    2) மத்திய மலைநாடு
    3) உலர்வலயப்பகுதி
    4) அண்சமவெளிப்பகுதி

**02. கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லினை எழுதி இடைவெளியைப் பூர்த்தி செய்க.**

1. மீனவப் பாடல்கள், வண்டிப் பாடல்கள் என்பன ........................ பாடல்கள் வகையின தாகும்.

2. கோட்டைகள் ........................ மரபுரிமை களுக்கு உதாரணங்களாகும்.

3. தொல்லியலாளர் பரணவிதாரண அவர்கள் மகுல் உயன பூங்காவை ........................ எனக் குறிப் பிட்டுள்ளார்.

4. சிகிரியா ஓவியங்கள் ........................ ஆண்டுகள் பழமை வாய்ந்ததாகும்.

5. பிறப்பில் செய்ய வேண்டிய சடங்குகளில் ........................ ஒன்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (x) எனவும் குறிப்பிடுக.

1. பாகிஸ்தானில் உள்ள மொஹஞ்சதாரோ நகர் அழிவுற்ற பண்பாடாக, பண்டைய நகர அமைப்பிற்கு சான்றாக உலக மரபுரிமைப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. ( )
2. கண்டி நகரம் 1991ம் ஆண்டு உலக மரபுரிமைப் பட்டியலில் ஒன்றாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ( )
3. காலிக்கோட்டை முன்னர் காலிஜிம்க தீர்த்த என அழைக்கப்பட்டது. ( )
4. முகமூடி செய்வதில் பலாங்கொடை பிரசித்தி பெற்று விளங்குகிறது ( )
5. கலாவாவி தொடர்பான நாட்டுப்பாடலுடன் காசியப்பன் தொடர்புபடுகின்றான் ( )

04. பின்வருவனவற்றை இணைக்கும் போது சரியான விடைக்குரிய ஆங்கில எழுத்துக் களை அடைப்புக்குள் எழுதுக.

1. தம்புள்ள இரஜமகா விகாரை ( ) A. பாதுகாப்பு
2. காலிக்கோட்டை ( ) B. அநுராதபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. எசலபெரஹுர ( ) C. சித்திரங்களுடன் கூடிய பாரிய குகைவிகாரை

4. சீனப்பெருஞ்சுவர் ( ) D. கண்டி தலதா மாளிகை

5. குட்டம் பொய்கை ( ) E. ஒல்லாந்த கட்டிடக்கலை மரபு

## விடைகள்

01. 1. [4] 2. [2] 3. [1] 4. [3]
5. [3] 6. [4] 7. [2] 8. [4]
9. [2] 10. [2]

02. 1. நாட்டார்
2. தொட்டுணரக்கூடிய
3. பிரமதவனம்
4. 1500 ஆண்டுகள்
5. பெயர் வைத்தல் / காதுகுத்துதல் / சோறு ஊட்டுதல் / ஏடு தொடங்குதல் (யாதாயினும் ஒன்று)

02. 1. (✓) 2. (×) 3. (✓) 4. (✓)
5. (✓)

04. 1. -C 2. -E 3. -D 4. -A
5. -B


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அலகு 04*

# கணிப்பீட்டுப் பயிற்சி

01. பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

1. தம்பதெனியா இராச்சியத்தின் முதல் மன்னன்.
   1) மகாபராக்கிரமபாகு
   2) 3ம் விஜயபாகு
   3) 4ம் புவனேகபாகு
   4) 1ம் புவனேகபாகு

2. யாப்ப கூவாவின் பிராந்திய ஆட்சித் தலைவராக விளங்குபவன்.
   1) சங்க தளபதி
   2) புவனேகபாகு
   3) வன்னி விஜயபாகு
   4) சுபதளபதி

3. கலிங்க மாகன் பொலனறுவை மீது ஆக்கிரமிப்பு மேற்கொண்ட ஆண்டு.
   1) 1215    2) 1452
   3) 1415    4) 1217

4. சூளவம்சத்தில் யம்புத்தோனி என அழைக்கப்பட்ட இராசதானி எது?
   1) கம்பளை    2) யாப்பகூவா
   3) தம்பதெனியா    4) குருநாகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. 2ம் பராக்கிரமபாகு மன்னன் பின்வரும் எந்நபரின் மூலம் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொண்டான்.
   1) நிஸ்ஸங்க அழகேஸ்வர
   2) சேனாதிலங்காதீகார
   3) தேவபதிராஜா
   4) சப்புமல்குமாரன்

6. தலதாசிரித, போதிவங்ஸய போன்ற இலக்கியங்கள் எழுதப்பட்ட ஆட்சிக்காலம்
   1) தம்பதெனியா 2) குருநாகல்
   3) கம்பளை 4) கோட்டை

7. யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னன்.
   1) சங்கிலியன்
   2) பரராஜ சேகரன்
   3) விஜய கூழங்கை சிங்கை சூரியன்
   4) செகராசசேகரன்

8. வீதாகம மைத்திரிதேரர், தொட்டகமுவ ஸ்ரீராகுல தேரர் போன்ற கல்விமான்கள் தோற்றம் பெற்ற காலம்.
   1) கோட்டைகாலம்
   2) குருநாகல் காலம்
   3) கம்பளை காலம்
   4) தம்பதெனியா காலம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

9. "மூன்றாம் விஜயபாகு பெலிகலையில் தலதா மாளிகை ஒன்றைக் கட்டி புனிதப்பொருட்கள் பிரதிஷ்டை செய்தான்" பெலிகலை அமைந்துள்ள மாவட்டம் எது?
   1) அம்பாந்தோட்டை
   2) கேகாலை
   3) இரத்தினபுரி
   4) கண்டி

10. "சாஹித்ய சர்வக்ஞ பண்டித" எனும் புகழ் நாமத்தை பெற்ற மன்னன்.
   1) மகாபராக்கிரமபாகு
   2) 2ம் பராக்கிரமபாகு
   3) 4ம் பராக்கிரமபாகு
   4) 6ம் பராக்கிரமபாகு

**02. கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லினை எழுதி இடைவெளியைப் பூர்த்தி செய்க.**

1. முதலாம் புவனேகபாகு ........................ நாட்டுடன் வர்த்தக நடவடிக்கை மேற் கொண்டிருந்தான்.

2. ........................ தளபதியால் இறைகம ஆட்சியாளன் வீர அழகேஸ்வரர் சீனாவிற்கு கைதியாக கொண்டு செல்லப்பட்டான்.

3. கம்பளை இராச்சியம் (கங்காஸ்ரீபுர) ........................ மன்னனால் தலைநகராக்கப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. 2ம் பராக்கிரமபாகு மன்னனால் ........................ எனும் காவியம் எழுதப்பட்டது.

5. செலலிகினி சந்தேச எனும் இலக்கியம் ........................ இராச்சிய காலத்தில் எழுந்ததாகும்.

**03. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் குறிப்பிடுக.**

1. மலையக ஆட்சியாளனுக்கு எதிராக ஜோதிய இளவரசன் கிளர்ச்சி செய்தபோது 6ம் பராக்கிரமபாகு அதனை அடக்க அம்புலுகல குமாரனை அனுப்பினான். ( )

2. யாழ்ப்பாண இராச்சியம் 1619ல் போர்த்துக்கேயர் வசமானது. ( )

3. குருநாகல் காலத்தில் இபன்பதுதா என்ற அரேபிய தேசசஞ்சாரி இலங்கைக்கு வருகை தந்திருந்தார். ( )

4. கம்பளை காலத்தில் பன்சிய பனஸ் ஜாதகய எனும் நூல் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. ( )

5. 4ம் விஜயபாகு மன்னன் இரண்டாம் பராக்கிரமபாகுவின் மகன் ஆவான் ( )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பின்வருவனவற்றை இணைக்கும் போது சரியான விடைக்குரிய ஆங்கில எழுத்துக் களை அடைப்புக்குள் எழுதுக.

1. ஆரியச்சக்கரவர்த்தி அரசவம்சம் ( ) A. 1344ம் ஆண்டு
2. பண்டித பராக்கிரமபாகு ( ) B. 1272ம் ஆண்டு
3. இபன்பதூதா ( ) C. எம்பக்க தேவாலயம்
4. யாப்பகூவா ( ) D. யாழ்ப்பாண இராச்சியம்
5. கம்பளை இராசதானி ( ) E. நான்காம் பராக்கிரமபாகு

## விடைகள்

01. 1. [2] 2. [4] 3. [1] 4. [3]
5. [3] 6. [2] 7. [3] 8. [1]
9. [2] 10. [2]

02. 1. எகிப்து
2. செங்ஹேறா
3. 4ம் புவனேகபாகு
4. கவிசிலுமின
5. கோட்டை

02. 1. (✓) 2. (✓) 3. (×) 4. (×)
5. (✓)

04. 1. -D 2. -E 3. -A 4. -B
5. -C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ACC NO

*அலகு 05*

# கணிப்பீட்டுப் பயிற்சி

01. பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

1. மேலைத்தேய வைத்தியத்துறையின் தந்தையாகக் கருதப்படுபவர் யார்?
   1) அரடோஸ்தினிஸ்
   2) அரிஸ்ரோட்டல்
   3) ஹிப்போகிரடீஸ்
   4) பைதகரஸ்

2. பிளேட்டோவின் கல்வி நிலையம்
   1) கொன்சல் 2) அக்கடமி
   3) லைசியம் 4) சியுஸ்

3. கிரேக்கத்தில் தோன்றிய நகர அரசு
   1) பொலஞ்ஞா 2) ஸ்பாட்டா
   3) வெனிஸ் 4) கொசென்ஸா

4. கிரேக்கத்தின் பொற்காலமாகக் கருதப் படுவது பின்வரும் எம்மன்னன் காலத்திலாகும்.
   1) பெரிக்கிளிஸ்
   2) பிலிப்மன்னன்
   3) மகா அலெக்சாண்டர்
   4) எதென்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கிரேக்க கணிதத் துறையின் தந்தை யார்?
   1) ஹிப்போகிரடீஸ் 2) ஆக்கிமீடிஸ்
   3) அரிஸ்ரோட்டல் 4) சோக்கிரட்டீஸ்

6. உரோம காலத்தில் காணப்பட்ட சமூகப் பிரிவினுள் அடங்காத பிரிவினர்.
   1) பிரபுக்கள் 2) விவசாயிகள்
   3) குடிமக்கள் 4) அடிமைகள்

7. பாதீனன் தேவாலயம் பின்வரும் எத்தெய்வ வழிபாட்டுக்குரிய ஆலயம்?
   1) அதீனா 2) சியுஸ்
   3) வீனஸ் 4) ஒலிம்பஸ்

8. உரோம நாகரிகத்தின் மூலமாக உலகுக்கு கிடைத்த கொடைகளில் ஒன்று
   1) நவீன ஜனநாயகமுறை
   2) ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டி
   3) இலத்தின்மொழி
   4) நவீன தத்துவ சிந்தனைகள்

9. உருவில் காட்டப்படுபவர் யார்?
   1) சோக்கிரட்டீஸ்
   2) அரடோஸ்தினிஸ்
   3) பிளேட்டோ
   4) ஆக்கிமீடிஸ்

Class No: 900
Acc No 528



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பின்வருவோரில் இலியட், ஒடிசி போன்ற வீரகாவியங்களை எழுதியவர்.
    1) ஈசிகிளஸ் 2) ஹோமர்
    3) செபொக்கிலிஸ் 4) யூரிபிடிஸ்

**02. கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லினை எழுதி இடைவெளியைப் பூர்த்தி செய்க.**

1. பாதினன் தேவாலயம் செப்பனிடப்பட்ட ........................ ........................ என்பவற்றைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டது.

2. கிரேக்க நாகரிக காலத்தில் நாடகங்கள் ........................ ........................ என இருவகையாக அமைந்திருந்தன.

3. கிரேக்கத்தை ஆக்கிரமிப்பு செய்தவன் மெசிடோனியாவின் ........................ மன்னன் ஆவான்.

4. உரோமில் முடியாட்சி முறை அழிவுற்று கி.மு 509ல் ........................ ஆரம்பமாகியது.

5. ........................ மன்னன் காலம் உரோமின் பொற்காலம் எனக் கருதப்பட்டது.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wellawatte Public Library

03. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் குறிப்பிடுக.

1. கொன்சலின் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக மூத்த குடிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்டதே "செனட்சபை" ஆகும். ( )

2. உரோம் நகரானது மத்தியதரைக் கடலுக்குள் நீட்டிக் கொண்டிருக்கும் குடாநாடான பிரான்சில் அமைந்துள்ளது. ( )

3. யுருபிடிஸ் என்பவர் கிரேக்கத்தின் பிரசித்திபெற்ற நாடகக் கலைஞர்களுள் ஒருவர் ஆவார். ( )

4. அரிஸ்ரோட்டில் நவீன அரசியல் விஞ்ஞானத்தின் பிதாவாகக் கருதப் படுகிறார். ( )

5. குடியரசு என்பது பிளேட்டோ எனும் தத்துவ ஞானியால் எழுதப்பட்டது. ( )

04. பின்வருவனவற்றை இணைக்கும் போது சரியான விடைக்குரிய ஆங்கில எழுத்துக் களை அடைப்புக்குள் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | அக்கடமி | ( ) | A. சிகிரியா |
| 2. | கணிதமேதை | ( ) | B. சியுஸ் |
| 3. | எதென்ஸ் | ( ) | C. அரடோஸ்தினிஸ் |
| 4. | பூகோளத்தின் அதிபதி | ( ) | D. அதினா |
| 5. | உரோம நாணயம் | ( ) | E. பிளேட்டோ |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

01. 1. [3] 2. [2] 3. [2] 4. [1]
5. [2] 6. [2] 7. [1] 8. [3]
9. [3] 10. [3]

02. 1. சுண்ணாம்புக்கல், வெண்பளிங்குக்கல்
2. இன்பியல், துன்பியல்
3. பிலிப்
4. சமூக ஆட்சி முறை
5. ஒகஸ்டஸ்சீசர்

02. 1. (✓) 2. (×) 3. (✓) 4. (✓)
5. (✓)

04. 1. -E 2. -C 3. -D 4. -B
5. -A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவதெளி சேனை



தீயிட்டு புதிதாக உருவாக்கப்பட்ட நிலமாகும். இது மிகவும் செழிப்பான விளைநிலமாகும். திணை, சாமை, குரக்கன், கத்தரிக்காய், வட்டுக் காய், வாழை, வத்தாளை, சிறுகிழங்கு போன்றபயிர்கள் பயிரிடப்பட்டன.

## வெருளி (ஹெலிகடா)



பானை ஒன்றை தலையாகக் கொண்டு செய்யப்பட்ட உருவம் ஆகும். தோட்டங்களில் பயிர்களுக்கு ஏற்படும் சேதாரங்களைத் தவிர்ப்பதற்காக வைக்கப்பட்டிருக்கும்.

## நெற்குதிர்



நெல்லைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு இதனை (உப்ட்டிக்குவிபல) நிர்மாணித்தனர்.

## தவளம்




போக்குவரத்திற்கு மாடுகளின் முதுகில் பொருட்களை ஏற்றுச் செல்லும் முறை தவளம் எனப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹஸ்எப்பு கஹபண :




இது புராதன காலத்தில் பாவனையிலிருந்த நாணயமாகும். இதில்மரம், யானை, சூரியன்என்பன காணப்படுகின்றது. இம்மூலாதாரம் மூலம் பண்டைய பொருளாதார முறையை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

## சீன மட்பாண்டங்கள்.



சீனாவுடனான வெளிநாட்டு வர்த்தகத் தொடர்பு காணப்பட்ட தற்கான தொல் பொருள் சான்றாக விளங்குகின்றது. கடல்மார்க்கமாக வர்த்தகம் இடம்பெற்றதாக நாம் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

## மிகிந்தலை வைத்தியசாலை.



எமது மன்னர்கள் மக்கள் நலன்விரும்பிகளாக விளங்கினர் என்பதற்கும், வைத்தியத்துறையில் சிறப்புப் பெற்றிருந்தனர் என்பதையும் விளக்குகின்றது. 2ம் சேன மன்னன் சேவைகளில் இது முக்கிய இடம் பெற்றது.

## மிகிந்தலைக் கல்வெட்டு.



இது 4ம் மகிந்தனால் அமைக்கப்பட்ட கல்வெட்டாகும். இது அக்காலத்தில் நிலவிய அடிப்படை முகாமைத்துவம் குறித்த மிக முக்கிய தொல்பொருள் மூலாதாரமாகத் திகழ்கிறது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரன்மசுப்பூங்கா




இயற்கையாக இருந்த கற்பாறை களை நன்கு வளப்படுத்தி நீர்ப்பூங்காவாக வடிவமைக்கப் பட்டுள்ளது. தொட்டுணரக்கூடிய கலாசார மரபுரிமைச் சின்னமாகத் திகழ்கின்றது.

## நிஸங்கலதா மண்டபம்




நிஸங்க மல்ல மன்னனால் அமைக்கப்பட்டது. கலிங்க கலைப்பணியில் தூண்கள் நன்கு பொழியப்பட்டு, சிற்பங்களுடன் கூடிய கலையம்சங்களைக கொண்ட தொட்டுணரக்கூடிய வரலாற்றுச் சொத்துக்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

## மொஹஞ்சதாரோ



சிந்துவெவளி நாகரீகம் சிறப்புற்றிருந்த நகரங்களில் ஒன்றாகும். சிறந்த கட்டடக்கலைக்கும், திட்டமிட்ட நகர நிர்மாணத்திற்கும் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

## சீனப்பெருஞ்சுவர்




சீனாவின் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட சுவர் ஆகும். சீனாவின் பண்பாட்டை எடுத்தியம்பும் சின்னமாகவும், உலக அதிசயங்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பழைய அநுராதபுரம்




இது 1982 ஆம் ஆண்டு மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. புராதன மன்னர்களின் இராசதானியும் வழிபாட்டிடங்கள், பூங்காக்கள், வைத்தியசாலைகள், பிரிவெனாக்கள் என்பனவும் ஓரிடத்தில் செறிந்து காணப்படுவது இந்நகரின் சிறப்பம்சமாகும்.

## பொலனறுவை நகர



1982 ஆம் ஆண்டு உலக மரபுரிமைப்பட்டியலில் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. அதிகளவு இந்துசமதச் சிலைகள் இங்கு காணப்படுகின்றது. பூங்காக்கள், பிரிவெனாக்கள், வைத்தியசாலைகள் என்பனவும் ஓரிடத்தில் அமைந்துள்ளன.

## சிகிரியா



உலக மரபுரிமையில் பட்டியலில் 1982ம்ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது. பழைய கோட்டை, அரச மாளிகை, கலைஅம்சங்கள், நீர்ப்பூங்காக்கள், ஓவியங்கள் என்பவற்றை தன்னகத்தே கொண்ட இலங்கையின் வரலாற்றுச் சொத்துக்களில் ஒன்றாகும் காசியப்ப மன்னனால் இக்கோட்டை அமைக்கப்பட்டுள்ளது. உலகின் 8வது அதிசயமாகத் திகழ்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்புள்ள ரஜ மகாவிகாரை மாத்தளைமாவட்டத்தில் தம்புள்ளையில் 500 அடி உயரமானகுன்றில் அமைக்கப்பட்டுள்ளது. வட்டகாமினி அபயன் அமைப்பித்தான் என வரலாறு கூறுகின்றது. 1991ஆம் ஆண்டில உலக மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள சித்திரங்கள் கொண்ட குகை விகாரை ஆகும். மிகவும் குளிர்ச்சியான, ஆரோக்கியமான இடமாக விளங்குகின்றது.




அபயகிரி விகாரை



- அநுராதபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது
- வலகம்பா மன்னனால் அமைக்கப்பட்டது.
- இதனைப் புனர்நிர்மாணம் செய்த மன்னர்கள் Iம் கஜபாகு, கனிட்ட திஸ்ஸ ஆகியோராவர்.
- குப்பிகல திஸ்ஸ தேரருக்கு வலகம்பா மன்னனால் தானமாக அளிக்கப்பட்டது.


கண்டி தலதா மாளிகை 1988 ஆம் ஆண்டு உலக மரபுரிமையாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. அஸ்கிரிய, மல்வத்த குருமார்களால், பூஜை வழிபாடுகள் நாளுக்கு மூன்றுதடவை மேற்கொள்ளப்படுகின்றன. கண்டி நாட்டின் பழக்கவழக்கங்கள், சம்பிர தாயங்கள்,பாரம்பரிய கலையம் சங்களைக் கொண்ட எசல்பெரஹர விசேடத்துவம் பெற்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலிக்கோட்டை



இலங்கையின் தென்மேற்குக் கரையில் அமைந்துள்ளது. 1588ம் ஆண்டு போர்த்துக்கேயரால் கட்டப்பட்டது. 17ம் நூற்றாண்டளவில் ஒல்லாந்தரினால் விஸ்தரிக்கப்பட்டது. இது ஓர் வரலாற்று சிறப்புமிக்க கட்டடக்கலை தொழில்நுட்பத்தை எடுத்துக் காட்டுகின்றது. 1988ம் ஆண்டு UNESCO நிறுவனத்தினால் உலக மரபுரிமைப்பட்டியலில் சேர்க்கப் பட்டது.

யாப்பகூவா கோட்டை



மலைகளும் காடுகளும் சூழப்பட்ட பாதுகாப்பான படிக்குன்றில் அமைக்கப்பட்டது. 'சுப என்ற தளபதி யாப்பகூவக் குன்றின் மீது பாதுகாப்பு கருதிகோட்டையை அமைத்துக கொண்டான். யாப்பகூவாவை தலைநகராக்கியவர் 1ம் புவனேகபாகு ஆவான் வடபகுதி ஆட்சியாளர்களினது அச்சுறுத்தலுக்கும், வன்னித் தலைவர்களின் கிளர்ச்சிக்கும் பாதுகாப்பாக அமைந்தது.


லங்காதிலக விகாரை



கம்பளையில் காணப்படுகின்றது. இந்திய கலைப்பணியைப் பின்பற்றி அமைக்கப்பட்டது. தமிழ், சிங்கள கலைகளின் அம்சங்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நிஸங்கமல்ல மன்னன் அரண்மனைச் சிதைவுகள



நிஸங்கமல்லன் பல அரசர்களை வெற்றி கொண்டு 9 ஆண்டுகள் ஆட்சி செய்தான். இவனது அரசசபை நிகழ்வுகள இங்கு இடம்பெற்றன. அங்கு காணப்படும் கற்றூண்களில் இராஜசபையின அதிகாரிகள் அமரும் இடங்கள் குறிப்பிடப் பட்டிருந்தன.

## பாரம்பரிய கலை நுட்பங்கள் முகமூடிகள்



பல்வேறு சமய, சாந்தி கர்ம சடங்குகளின் பொருட்டும், கூத்துக்களின் பொருட்டும் செய்யப்பட்டன. இவை பலாங்கொடை,உடுபில மற்றும் இலங்கையின தென்பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

## பாந்தியன் ஆலயம்




உரோமர்களால் வணங்கப்பட்ட தெய்வங்களுக்காக அமைக்கப்பட்ட ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட பெயரே பாந்தியன் ஆலயம் ஆகும். இவ்வாலயங்கள உரோமரின் கட்டடக்கலைக்கு சிறப்பூட்டுவதாக அமைகின்றன. செப்பனிடப்பட்ட கண்ணாடிக்கல், வெண்பளிங்குக்கல், வர்ண செங்கற்கள் பலவற்றைக் கொண்டு அமைத்துள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரக்கிரமபாகு அரண்மனைச் சிதைவுகள்



பொலனறுவையில் அமைந்து உள்ளது. மகா பராக்கிரமபாகு மன்னரின் அரண்மனையின் சிதைவடைந்த தோற்றமே இதுவாகும்.அவனது ஆட்சிக்கு எடுத்துக்காட்டாக இது விளங்குகின்றது.

## புராதன உரோமானியப் பாலம்



உரோமானியர் வில் வடிவில் வளைவுகள், கோள வடிவிலான உச்சிகளுடன் கட்டடங்களை நிர்மாணிப்பதில் வல்லவர்களாக இருந்தனர். இப்படம் அத்தகைய கட்டட நுட்பத்தையே எமக்கு புலப்படுத்துகின்றது.

## அகஸ்டஸ் சீசர்




இம்மன்னனின் ஆட்சிக்காலம் உரோமானிய வரலாற்றின் பொற்காலமாகக் கருதப்படுகின்றது. உரோமரின் புராதன கட்டடம் கொலோசியம், பெருங்குளியில் தடாகம் என்பன இவரின் நிர்மாணமாங்களாகும். இவரது ஆட்சிக் காலத்திலேயே யேசுநாதரின் பிறப்பு இடம்பெற்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலோசியம்



உரோமர்களின் திறந்த வெளி விளையாட்டு அரங்கமாகும். உலக ஏழு அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. உரோமின் வீர விளையாட்டுக்கள் இங்கு இடம்பெற்றன.

## பரிதி வட்டம் வீசுதல் சிலை



கிரேக்கர்கள் ஒலிம்பிக் விளையாட்டை சியுஸ் தெய்வத்தின் நினைவாக நிகழ்த்தினர். விளையாட்டுக்களில் மிகச்சிறப்பான விளையாட்டுக் - களில இவ்விளையாட்டும் ஒன்றாகும். கிரேக்கரின் சிலை வடிக்கும் திறனுக்கு இச்சிலையும் ஓர் எடுத்துக்காட்டாகும்.

## யூலியசீசர்




திறமையான புகழ்பெற்ற போர்வீரன் ஆவான். ஆரம்பத்தில் உரோமப் பேரரசைக் கட்டி எழுப்பிய போர்வீரன் ஆவான். நேர்மையான ஆட்சியாளனும், சட்டவாளனாகவும் திகழ்ந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகிரியா மகுல் உயனப் பூங்கா



சிகிரியா குன்றின் மேற்குத் திசையில் பரந்த பிரதேசத்தில் அமைந்துள்ள பூங்கா மகுல் உயனப் பூங்காவாகும். தொல்பொருள் ஆய்வாளர் பரணவிதாரண அவர்களால் இதற்கு வழங்கப்பட்ட பெயர் பிரதம வனம் ஆகும்.

## நல்லூர் கந்தசுவாமி ஆலயம்



கி.பி 1248 ஆண்டு யாழ்ப்பாணத்தில் நல்லூரிலே குருக்கள் வாயிலிலேயே கட்டப்பட்டது. இது சைவ மக்களின வழிபாட்டிடமாகும். தமிழ் மக்களின் வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த கோயிலாக உள்ளது. யாழ்ப்பாண இராச்சியத்தில் பல நூறு ஆண்டுகளாக இவ்வாலயம் சிறப்புற்று விளங்குகின்றது.

Class No: 900
Acc No 528
Arasady Public Library
Municipal Council
Batticaloa



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 900
Acc No 528
Arasady Public Library
Municipal Council
Batticaloa.
528



pbd
101003036
VARALARU G-7 (SIRUKURIPPU)
Rs. 175.00

பூபாலசிங்கம் புத்தகசாலை
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பேசி : 011 2422321, 0112435713
மின்னஞ்சல் : Poobalasingham202@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org